விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 10 ஞாயிற்றுக்கிழமை (23.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095




# நாயாறு கடலில் அதிவேகப் பீரங்கிப் படகு மர்மமான முறையில் வெடித்துச் சிதறியது

## 10 கடற்படையினரைக் காணவில்லை கட்டளை அதிகாரி உட்பட 6 பேர் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையின் அதிவேகப் பீரங்கிப் படகு ஒன்று மர்மமான முறையில் வெடித்துச் சிதறியிருக்கின்றது. இதிலிருந்த கட்டளை அதிகாரி உட்பட 16 கடற்படையினரில் 10 பேர் காணாமல் போயுள்ளனர். ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவில் இருந்து மேலும் சிலரை அரசில் சேர்த்துக் கொள்ளப் பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை வழங்கும் வகையில் அரசுக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய ஜனநாயகக் குழுவுடன் இணைந்து அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதாக அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர், ஐக்கிய தேசிய ஜனநாயகக் குழுவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கவனம் செலுத்தி வருவதாக அரசின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான நடவடிக்கைக்கு இந்தியா முழு ஆதரவு தருகிறது

### மதுரையில் அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளுடனான மோதலுக்கு இந்தியா தனது முழு ஆதரவையும் வழங்கி வருவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இந்தியாவில் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மதுரைக்குச் சென்று அங்குள்ள புனித மரியாள் தேவாலயத்தில் பெரிய வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சிறப்புப் பிரார்த்தனையில் பங்குபற்றினார்.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு தேவாலயத்திலிருந்து வெளியேறிய அவர் அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது விடுதலைப்புலிகள்தான். ஆனால் பழி இராணுவத்தின் மீது விழுகின்றது. தமிழக மீனவர்களை இலங்கை இராணுவம் தாக்கி வருவதாகக் கூறுவது முற்றிலும் தவறான தகவல்.

இலங்கையில் அமைதி திரும்புவதைப் புலிகள் விரும்பவில்லை. பிரிவினையை ஏற்படுத்துவதுதான் அவர்களது நோக்கம். அவர்கள் வெடிகுண்டு கலாசாரத்தையே விரும்புகின்றனர். இந்தப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தரோடையில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(சுன்னாகம்)

கந்தரோடை முருகன் கோயிலடியில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கந்தரோடை பூதவராயர் கோவிலடியைச் சேர்ந்த தர்மராஜா ரகுபதி (வயது-34) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் இன்னுமொருவரை ஏற்றிக் கொண்டு சுன்னாகம் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் பிரஸ்தாப குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வருடத்தின் இறுதியில் பொதுத் தேர்தல் நடக்கும்?

(கொழும்பு)

இந்த வருட இறுதியில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை , கிழக்கு மாகாணச் சபைத் தேர்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் மன்னார் மடுமாதா தேவாலயத்தை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்பதற்கான தாக்குதல்களை இராணுவத்தினர் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் அரச வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் போன்று (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தலில் இரு அமைச்சர்கள் போட்டி?

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இரு அமைச்சர்கள் போட்டியிடவிருப்பதாகவும் இவ்விரு அமைச்சர்களும் விரைவில் தங்கள் அமைச்சுப்பதவிகளை இராஜினாமாசெய்யலாம் எனஅரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அமைச்சர்களைத் தங்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகுமாறு அரசு கோரியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு பதவிகளை இராஜினாமா செய்யும் இரு அமைச்சர்களும் அரசாங்கத்தின் கூட்டமைப்புக் கட்சியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் நேற்றுக் கடும் மோதல்

## ஒரு பகுதியைக் கைப்பற்றிவிட்டோம் - படையினர்

(கொழும்பு)

நேற்று அதிகாலை முதல் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மன்னார்ப் பகுதியில் இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னர், மன்னார் பறையனாளன் குளம் மற்றும் இலந்தேவன் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியிருப்பதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களின் ஒரு கிலோமீற்றர் பரப்பு தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறியுள்ளார். நேற்றுக் காலை 6 மணியிலிருந்து இரண்டு தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற கடுமையான மோதல்களைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளை இராணுவத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இழப்பை ஏற்படுத்தி முறியடித்தோம் - புலிகள்

(கிளிநொச்சி)

மன்னாரில் படையினர் மேற்கொண்ட பாரியளவிலான முன்னகர்வுத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 55ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 120ற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலைக்குழி, இத்திக்கண்டல் பகுதிகளில் 2 முனைகளில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்குப் படையினர் பெருமெடுப்பிலான தாக்குதலை மேற்கொண்டனர். பல்குழல் வெடிகணைகள், ஆட்லறித் தாக்குதல்கள், மோட்டார்த் தாக்குதல்களுடன் படையினர் முன்னகர்வுத் தாக்குதல்களை நடத்தினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A'சித்தி பெற்ற மாணவர்களின்

## கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008




மகாஜனாக் கல்லூரி மாணவி




ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன்




இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் கௌவிப்பு நிகழ்ச்சிகளைத் தொகுத்து அறிவிப்பதைப் படத்தில் காண லாம். (முற்றும்)

## சாயி அமிர்தம்



துளி-05

23.03.2008

### சர்வமதப் பிரியரான சாயி அவதாரம் ஏன்?

அணுகுண்டுக்குப் பயப்படும் மனிதன் அணுகுண்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானிக்குப் பயப்படுவதில்லை. இயற்கை புயலாகவும், பூகம்பமாக வும், சுனாமியாகவும், சீறும்போது பயப்படுகிறான். ஆனால் இயற்கை யைப் படைத்த தெய்வத்துக்குப் பயப்படுவதில்லை.

தெய்வ பயம் குறைந்து போனதால் **மத நிந்தனை, மதமாற்றம், மத வன்முறைகள்** பூமியில் தலைவிரித்தாடுகின்றன. இதனால் மனித குலம் அமைதியிழந்து தவிக்கிறது. ஒரேகடவுள் தான் எல்லா மதங்களிலும் உள் ளார் என்பதை மனித குலத்துக்கு எடுத்துக் காட்டவே சர்வமதப் பிரியராக தெய்வம் சாயி அவதாரம் எடுத்துள்ளது. பகவானின் கட்டளைப் படி சாயி மந்திர்கள் தோறும் சர்வமதப் பிரார்த்தனையும் சர்வமதக் கொண்டாட்டங் களும் நடைபெற்று வருகின்றன. சாயி பகவான் சர்வமதத்தவர்களுக்கும் அருள்புரிந்து கொண்டு இருக்கிறார்.

ஜெய் சாயிராம்

(955)

## நல்லூர் முருகன் சனசமூக நிலையம்

### உயர்திரு.கந்தையா குமாரசுவாமி (J.P.)



அவர்களின் 50 வருட சமூகப் பணியினைப் பாராட்டி அவரின் 'அமுதவிழா' அன்று 'அயயகரம்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் விழா அழைப்பு.

இடம் :- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம் :- 23.03.2008 ஞாயிற்றுக்கிழமை 2.30 மணி
தலைமை :- திரு நா.சோமசுந்தரம் (பிரபல வர்த்தகப் பிரமுகர்- யாழகம்)

**நிகழ்ச்சி நிரல்**

1.தேவாரம் :- திரு. ச.கனகரட்ணம்
2.மங்கள விளக்கேற்றல் :-
3.வரவேற்புரை :- பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், ஜே.பி.
4.ஆசியுரை :- ❖நல்லை ஆதீன முதல்வர்
❖உயர்திரு.கா.மயில்வாகனம் (கீதா விரிவுரையாளர்)
5.தலைமையுரை :-
6.பாராட்டுரைகள் :- ❖திரு.ம.பிரதீபன் (திட்டப் பணிப்பாளர், மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகம்)
❖திரு.மு.செ.சரவணபவ (ஆணையாளர்- யாழ்.மாநகர சபை)
❖செல்வி புஷ்பா செல்வநாயகம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)
❖திருமதி இராகினி இராமலிங்கம் (கிராம சேவையாளர் நல்லூர் தெற்கு)
7.வாழ்த்துரை :- 'செஞ்சொற் செல்வர்' ஆறு. திருமுருக்ன் (பிரதி அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
8.கௌரவிப்பு :-
9.பதிலுரை :-விழா நாயகன்
10.நாட்டிய நிகழ்ச்சி :-நல்லை கலாமந்திர் மாணவிகள் வழங் கும் நாட்டிய நிகழ்ச்சி)
நட்டுவாங்கம் - திருமதி அனுசாந்தி சுகிர்தராஜ்
பாட்டு - திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன்
திரு.பி.என்.சுதர்சன்
மிருதங்கம் - திரு. எஸ்.துரைராஜா
வயலின் - திரு. கே.பத்மநாதன்
11.நன்றியுரை :- அ.கோபாலகிருஷ்ணன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

75/2, செட்டித்தெரு,
நல்லூர்

நல்லூர் முருகன் சனசமூக
நிலைய சமூகம்

(959)

## குருநகரில் வைரவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித வளன் விளையாட்டுக்கழக வைரவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு குருநகரில் நடைபெறவுள்ளது.

சிறுவர் விளையாட்டு உட்பட சைக்கிள் சாகச நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறவுள் ளன.

(ந)

## சிறுவர் சங்கம நிகழ்வு

யாழ்.லயன்ஸ் கழகம் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9.30மணிக்கு ஆனைக் கோட்டை (J/132) கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சிறுவர் கழகச் சிறுவர்களின் உள நலத்தை மேம்படுத்தும் நோக்குடன் 'சிறுவர் சங்கம நிகழ்வு' ஒன்றினை (SOND) அரசசார்பற்ற நிறுவனத்தின் ஆனைக் கோட் டை முன்மாதிரிக் கிராம அலுவலகத்தில் நடாத்தவுள்ளது. இதில் யாழ்.லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் பி.செந்தில் செல்வன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(அ)





உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நிகழ்வில் மோட் டார் சைக்கிள் அணிநடைக்கு விளையாட்டுக் குழுச் செயலர் த.நித்தியானந்தம் தலைமையில் இல்ல ஆசிரியர்கள் தயார் நிலையில் இருப்பதை முதலாவது படத்திலும் அதிபர் மு.விக்னேஸ்வரனுடன் விருந்தினர்களான உரும்பிராய் தபால் நிலைய அஞ்சல் அதிபர் ஆ.தனபாலசிங்கம், மக்கள் வங்கி உதவி முகாமையாளர் செல்வி தர்சிகா குணரத்தினம் ஆகியோர் அணிநடை மரியாதையை ஏற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படம்: கோப்பாய் நிருபர்)

**மேரி திருமண நிலையம்**

வெளிநாட்டில் வசிக்கும் P.R உடைய Non R.C., R.C., இந்து மதத் தைச் சேர்ந்தவர்களுக்கு உள்நாட் டிலும், வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை 1962 -1985க்கு உட்பட்டவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ச.உமாச்சந்திரன்
46,புதுவீதி,கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
T.P:-0779116346

(938)

**வாலை அம்மன் திருமண சேவை**

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்த மான மணமகன், மணமகள் தேர்ந் தெடுக்க உடன் தொடர்பு கொள்ளவும்:- 'வாலை அம்மன் திருமண சேவை,' இல. 4/1, செங்குந்தா சந்தை மேல்மாடி, நல்லூர்.

மேலும் கைரேகை பார்க்க, மணப் பெண் ஒப்பனை செய்ய, சகல வித மான கேக் வகைகளுக்கும், சகல வித மான பலகார வகைகளுக்கும் இங்கே தொடர்பு கொள்ளவும்.

(960)

**R.V.A சர்வதேச திருமண சேவை**

**INTERNATIONAL MARRIAGE BUREAU**

வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்களுக்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வசிக்கும் மணமகன்,மணமகள் ( V )தேவை. 1959ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட ஆண், பெண் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ராஜா மாதா திருமண சேவை
இல.70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

T.P:- 0779564944

(962)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கைகள் அரசாங்கத்தினால் முற்றாக நிராகரிப்பு

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது . இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அரசாங்கம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன தெரிவித்தார்.



இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக சர்வதேச நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது வன்னி சென்று விடுதலைப் புலிகளை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கை சாத்தியமற்ற தொன்றாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதிகள் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து கவலை தெரிவித்ததுடன் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வன்னி சென்று விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கு இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இது குறித்து கேட்டபோதே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சமாதான பேச்சுவார்த்தை இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே புலிகள்பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருந்தது.

சமாதான பேச்சு வார்த்தை இடம் பெற்ற காலங்களில் புலிகள் இராணுவ ரீதியில் தம்மை பலப்படுத்தி கொள்வதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர். அத்துடன் இராணுவ ரீதியில் பல மடைந்ததன் பின்னர் சமாதான பேச்சுவார்த்தையிலிருந்து விலகி மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளிலேயே ஈடுபட்டனர். கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தீர்வு எட்டப்படாத நிலையில் பேச்சுவார்த்தைகள் முறி வடைவதற்கு புலிகளே காரணமாக இருந்தனர் என்பதை சர்வதேச. சமூகத்தினரின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்திருக்கின்றோம். இந்நிலையில் புலிகளை மீண்டும் சமாதான பேச்சுவார்த்தைக்கு தயார்படுத்துவதற்கான நடவடிக்கை எவ்வளவு தூரம் சாத்திய மானதாக இருக்கமுடியம் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடுகுறித்து வெளிவிவகார அமைச்சினூடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றியத்தின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய, ஒன்றாக இல்லை என்பதையும் அக்கடிதத்தின் மூலமாகவே சுட்டிக்காட்டியுள்ளோம் என்றார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்திருந்த அக்குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இயக்குனர் ஜேம்ஸ் மோறன் ஒன்றியத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் சொல்வேனியா வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இயக்குனர் சானிஸ் பிறிமோஸ், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்தியத்துக்கான இயக்குனர் டிடொ லிவோய் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் தங்கள் விஜயத்தை முடித்துக்கொண்டுதிரும்புவதற்கு முன்னர் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத் தில் நடத்திய ஊடகவியலாளர் நாட்டிலேயே புலிகளை சந்திப்பதற்கான கோரிக்கை முன்வைத்தனர்.

இலங்கையில் மோசமடைந்து வரும் நிலைமைகள் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கதோர் ஆணைக்குழு பணியை இடை நிறுத்தியமை தமக்கு கவலை தந்துள்ளதாக இக்குழுவினர் சுட்டிக்காட்டினர்.

அது மட்டுமல்லாது விடுதலைப் புலிகளை மீண்டும் சமாதான செயன் முறைக்கு திரும்பச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுசரணையாளரான நோர்வே இணைத்தலைமைகள் கிளிநொச்சிக்கு செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் இவர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இவ் ஆண்டு கிறிஸ்து உயிர்ப்பு விழா வரலாற்று சிறப்புமிக்கது

இளவேனிற் பருவகாலத்து பகல் இரவு சமனான பொழுது ஞாயிறு நில நடுக்கோட் டினைக் கடந்து செல்லும்வேளை உண்டு இவ்வாண்டு மார்ச் 20 நாள்) அதன் பின் வரும் முதலாவது பூரணையை (பௌர்ணமி) தொடர்ந்து வரும் முதல் ஞாயிறு தினத்தில் இயேசுவின் உயிர்ப்பு விழா எப்பொழுதும் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இது யூத மக்கள் பயன்படுத்திய மாநிலாவட்ட ஆண்டுக் குறிப்பேட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. இக்குறிப்பேட்டிற்று ஒப்பவே யூத மக்கள் பாஸ்கா என்னும் விடுமுறைத் திரு விழாவையும் கொண்டாடி வந்தனர். இரண்டு மறையுலா மதிகளுக்கு இடைப்பட்ட காலத்து 29அரை நாட்கள் கொண்ட மாதமாநிலா வட்டம் தளுவிய ஆண்டு நாட்குறிப்பேட்டிற் கும் கிறிஸ்துவுக்கு முன் 5ஆம் தூற்றாண்டு தொடக்கம் உரோமயர்களால் கடைப்பிடிக்கப் பட்டும் காலாகாலத்தில் 16வது நூற்றாண்டு வரை திருத்தந்தை 13ஆம் கிறகோரியாருடைய மாற்றங்களை உள்வாங்கியும் இன்று பொதுவாக பின் பற்றப்படும் உரோமை ஆண்டு நாள் குறிப்பேட்டிற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ள படியினால்தான் உயிர்ப்பு விழா கொண்டாடப்படும் நாள் ஆண்டின் முற்பகுதியில் பிந்தியும் முந்தியும் வருகின்றது.

இம்முறை மார்ச் 23இல் கொண்டாடப் படும் உயிர்ப்பு விழாவே எமது வாழ்நாளில் காணக் கூடிய ஆண்டின் முற்பகுதியில் அதா வது மார்ச் மாதம் நான்காவது கிழமையில் வரும் ஒரு நாளில் கொண்டாடப் படும் ஒரே ஒரு உயிர்ப்புத் திருவிழாவாகும் என யாழ். ஆயரின் செயலர் வண பிதா எஸ்.ஏ. றொஷான் அடிகளார் தெரிவித்தார். அடுத்தமுறை இதே நாளில் அதாவது மார்ச் 23ஆம் நாள் உயிர்ப்பு விழாக் கொண் டாட்டம் இன்றிலிருந்து 220 ஆண்டுகளுக்கு பிற்பாடுதான் .கி.பி2228 ஆம் ஆண்டில் நிகழும். இறுதி முறையாக இதே நாளில் ஆண்டின் முற்பகுதியிலே 1913லே தான் உயிர்ப்பு விழா நிகழ்ந்தது.

மார்ச் 22ஆம் திகதி உயிர்ப்பு விழாகொண்டாடப்பட்ட கடைசி ஆண்டு 1818 .அதே திகதியில் அடுத்த முறை கொண்டாடுவது இன்றிலிருந்து 227 ஆண்டுகளுக்கு பின்பு தான் அதாவது 2285 இல் நாம் எவரும் இவ் விழாக்களை பார்ப்பதற்கு இருக்க மாட்டோம் என்பது வெளிப்படை.

ஆகவேதான் இவ்வாண்டின் மார்ச் 23ஆம் நாள் வரும் உயிர்ப்புவிழா வரலாற்றுச் சிறப்புமிக்கது என அடிகளார் மேலும் கூறினார்.

# தீமையால் நன்மையை வெல்ல முடியாது என்பதே ஈஸ்ரர் நமக்களிக்கும் செய்தியாகும்

யாழ். ஆயர்

இன்று எம்மை சூழ படுகொலைகளும், அகால மரணங்களும், காணாமல் போதல்களும், உயிர் அச்சுறுத்தல்களும் பாதுகாப் பற்ற பதற்ற நிலைகளும் பரவிக்கிடக்கின்றன. மனித வாழ்வு அச்சமும் பயமும் நிறைந்த தாய் பாதுகாப் பின்றி பீதியுடன் வாழப்பட வேண் டியுள்ளது. பொருளாதார நெருக்கடியும், வேலையில்லா நிலையும், தொடரும் இராணுவ நடவடிக்கைகளும் எதிர்நோக்கற்ற அரசியல் கள நிலையும் அச்சம் நிறைந்தவைய்யாகியுள்ளது.

இச் சூழமைவில் மீண்டுமோர் ஈஸ்ரர் விழாவை எதிர்கொள்ளுகின்றோம். ஆண்டவர் இயேசு தமது பாடுகள் மரணம் வழியாக இறந்து மீண்டும் உயிர் பெற்று நமக்கு ஒரு புது வாழ்வை அளிக்கின்றார். அவரின் உயிர்ப்பு உலகிற்கு புதிய நம்பிக்கையைக் கொடுக்கின்றது. எத்தகைய தீமைகள் நம்மை சூழ்ந்து கொண்டாலும் அவற்றிற்கு ஓர் முடிவுண்டு. பொய்மையால் உண்மையை வெல்ல முடியாது. இருளினால் ஒளியை ஆட்கொள்ள முடியாது. தீமையால் நன்மையை வெல்ல முடியாது என்பதே ஈஸ்ரர் நமக்கு அளிக்கும் செய்தியாகும்.

உயிர்த்த இயேசு தன் சீடர்களை நோக்கி நீங்கள் என் சாட்சிகள் என உரைத்து உண் மைக்கு சாட்சியம் பகிர அழைத்து நிற்கின்றார்.

உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உல கிற்கு வந்தேன். உண்மையை சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்கு செவி சாய்கின்றனர். (யோவான் 18:27)

'நீங்கள் என் சாட்சிகள்!' சாட்சியம் பகிர அழைக்கின்றார் உயிர்த்த இயேசு.

என்று பிலாத் துவுக்கு இயேசு கூறிய பதில் இதனையே சாற்றி நிற்கின்றது. உண்மை அலட்சியம் செய்யப் படுமிடத்து எல்லாமே சுக்கு நூறாகும் என்பது இதில் அடங்கியுள்ள தத்துவமாகும்.

இன்று எமது தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் பொய்மை கள் உண்மைகளாக கருதப்பட்டு அவ்வாறு உண்மைகளாக்கப்பட்ட பொய்மைகளை அடித் தளமாகக் கொண்டு செயற்பாடுகள் முன் னெடுக்கப் படும் துர்ப்பாக்கிய நிலை காரணமாகத் தான் இறை பிரசன்னத்தை பறி கொடுத்துக் கொண்டிருக்கின் றோம்.



பொய்மைகள் நிறைந்த சூனிய மான வாழ்வுக்கு அகப்பட்டு வாழ முடியாமல் திணறிக்கொண்டிருக்கின் றோம். சமாதானத்துக் கான எமது முயற்சிகளெல்லாம் தோல்வியடைந்து வருகின்றன. ஆயினும் கிறிஸ்துவின் உயிர்ப்பு தருகின்ற நம்பிக்கையில் தான் இன்னும் எம் வாழ்வு கடந்து சென்றிகெண்டிருக்கின்றது. எதிர் நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. (1தெச 4:13)

என்னும் பவுலின் அறிவுரையை நினைவு படுத்தி எமது வாழ்வினால் உண்மைக்கு வாழ்வு கொடுக்க நாம் ஒவ்வொருவரும் முன் வர வேண் டும்.

துன்பமும் துயரமும் நிறைந்த எம் வாழ் வில் மீண்டும் இயேசுவின் உயிர்ப்பு விழா எத்தகைய தீமைகள் எம்மை சூழ்ந்து நின்றாலும் இயேசு தரும் புதுவாழ்வினால் நன் மையே வெல்லும், உண்மையே உயர்வு தரும் என் பதை நிஜமாக்கு கின்றது.

இப் புதுவாழ்வை நோக்கி உயிர்த்த ஆண் டவர் ஆவியில் தரும் வல்லமையோடு புது யுகம் அமைக்க முன்னகர்வோம். உயிர்த்த இயேவின் நிறை ஆசீர் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!



கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி யின் உயர்வகுப்பு மாணவ மன்றத்தின் கல்விக் கண்காட்சியிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார் மாணவிகளால் வரவேற்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். அதிபர் வி. சிவசிதம்பர மும் காணப்படுகிறார்.

BEST COMPUTERS IN RESONABLE & FAIR PRICES

57000/=
Intel 1.8 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS
2.1 Woofer

51000/=
Intel 1.8 GHz DualCore Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512 MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

45000/=
Celeron 1.6 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
2.1 Woofer

69000/=
Intel 2.2 GHz Core 2 Duo Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

PC SOLUTIONS
527/1, Navalar Road, Jaffna.
(TCT Super Market - Upstair)

# எண் சோதிடம்



## எண் -7 (கேது)

(சென்றவாரத் தொடர்ச்சி)

79. வாழ்க்கை ஆரம்பத்தில் க்ஷீண தசை அடையும். பின்னர் இதனால் குறிக்கப்படுவோர் சாமர்த்தியத்தினாலும், மிதமிஞ்சின தீரத்தாலும் வேகமாக முன்னேற்றமடைவர். ஜன வசீகரமான வாழ்க்கையும், க்ஷேமமான நிலையும், நிலையான வெற்றியும் ஏற்படும். நல்ல திடமான அதிர்ஷ்டசாலியாவார். அற்புத மனிதராவர்.

88. இவ்வெண்ணிற்கு ஆத்மீக உயர்வு உண்டு. மனதில் தயை, கருணை முதலான மேன்மையான தன்மைகள் விசேஷமாக விருத்தியாகும். சகல ஜீவராசிகளுக்கும் அன்பு பூண்டவராவார். மிகுந்த கீர்த்திமானாகவும் வாழ்வர்.

97. இவ்வெண் சாஸ்திரங்கள், கலைஞானங்களில் தேர்ச்சி தரும். விசேஷமான ஆத்மீக உயர்வு உண்டு. சகல விதமான முயற்சிகளும் வெற்றிதரும். லக்ஷ்மீகரமும், பிரமிக்கத்தக்க செய்கைகளும் அமையும்.

106. வாழ்க்கையில் விசேஷ மாறுதல்கள் ஏற்படும். நடு வயதில் பலவித சிக்கல்களேற்படும். பின்னர் திருப்திகரமான வாழ்க்கை அமையும்.

சுலபத்தில் தீர்க்க முடியாத பெரும் பிரச்சினைகள் வாழ்க்கையில் ஏற்படும். அதனால் இவ்வெண் அதிர்ஷ்டகரமானதல்ல. அருள் நாட்டமும் குறைந்து பொருளாசை அதிகரிக்கும்.

**அதிர்ஷ்டகாலம்:** 7 எண்ணின் கீழ் பிறந்தோர் முக்கியமான காரியங்களை 2,11,20, 29 திகதிகளிலேயே செய்துவர வெற்றிமிகும். மற்றபடி திகதி, மாதம், வருஷம் மூன்றையும் கூட்டினால் 2 வரும் தினங்களும் நன்மை தரும்.

**சாதகமானநாட்கள்:** 1,10,19,28திகதிகளுள் நன்மையானவையே.

**முக்கியநாட்கள்:** 7,16,25 இவைகளில் 25 திகதிகளில் எப்பொழுதும் நன்மையும், 16ஆம் திகதிகளில் தீமையும் நிகழும். (25 அதிர்ஷ்டதினமாகக் கொள்ளலாம்). 7ஆம் திகதியும் தோல்வி தரக்கூடியதே. இவைகளைத் தவிர இவர்களுக்கு 8, 17, 26 திகதிகளும் துரதிர்ஷ்டமானவை. முழுதும் கூட்டினால் 7 அல்லது 8 வரும் தினங்களும் தீய பலனளிப்பவையே.

7 எண்ணின் கீழ் பிறந்தோர் 1 அல்லது 2 எண்ணிக்கைக்காரரை மணந்தால் நிச்சயமாக விசேஷ புத்திரப்பேறு உண்டாகும்.

**வர்ணம்:** வெள்ளையே இவர்கள் மனதை வெகுவாகக் கவரும். ஆனாலும் இவர்கள் வெள்ளையை விட இலேசான மஞ்சள், வெளிர் பச்சை, வெளிர்நீலம் ஆகிய வர்ணங்களைத் தவிர்ப்பதே நன்மை தரும். இலேசான எல்லா வர்ணங்களும் இவர்கட்குப் பொருந்தும்.

**பொருந்தாதவை:** எல்லா ஆழ்ந்த வர்ணங்களும் இவர்களுக்குதீமையானவை. முக்கியமாக சிவப்பும் கறுப்பும் துரதிர்ஷ்டமானவை.

**இரத்னம்:** வைடூரியம் மிக அதிர்ஷ்டமானது. இதைத் தரிப்பதால் தைரியமும், தெய்வ பலமும் மிகும். (இதிலுள்ள சூத்திரம் இருபுறமும் முழுவதும் ஓடுவதாக இருக்க வேண்டியது அவசியம்).

மற்றபடி முத்து, சந்திரகாந் தக்கல் என வழங்கும் (Moon Stone) கல் இவைகளும் நன்மையானவையே.

இவர்களுக்கு மற்ற உலோகங்களைவிட மண்ணே அதிகம் நன்மை பயப்பதாவதால் உணவு சமைக்க மட் பாத்திரங்களை உபயோகிப்பது உடல் நலத்தை விருத்தி செய்யும்.

*ஏழு எண்ணைக் குறிக்கும் எழுத்துக்களும் அவைகளின் பலன்களும்.*

'O' (70 அலை நீளம்) சிவப்பு, மஞ்சள், நீலம் மூன்றும் உடையது. ஆனாலும் இது கறுப்பு வர்ணத்தை ஆகர்ஷிக்கிறது. சிகப்பு வர்ணம் இருப்பது நிகரற்ற மனோசக்திகளைத் தருகிறது. கறுப்பு வர்ணத்தை ஆகர்ஷிப்பதால் எதிர்காலத்தை அறியக்கூடியதும், அது போன்ற விசேஷ சக்திகளையும் மனதிற்கு உண்டாக்குகிறது. சக்திகளையும் , விஷயங்களையும் ஒன்று திரட்டும் சக்தியும் தீர்மானமான காரியங்களும் உண்டு. புதுவிதமான முயற்சிகளும், கருத்துக்களும் ஏற்படும். தன்னிச்சைப்படியே காரியங்களை நடத்திச் செல்வார்.

அமானுஷ்யமான மனோ சக்திகள் வாழ்க்கையை ஆட்சிபுரியும். ஓரளவு தூஷணைகளும் பெருத்த எதிர்ப்புக்களும், பெரு முயற்சிகளில் ஈடுபடுவதற்கேற்ப தாராள மனப்பான்மையும் உண்டு. சீறியெழும் புலன் களை அடக்க வெகுவாகப் பாடுபடுவர்.

### பண்டிட் ஸேதுராமன்

அடிக்கடி சரீரத்தில் ஏதாவது கோளாறு தோன்றி இடையூறு செய்யும். இப் பலன்களெல்லாம் 'O' கடைசி எழுத்தாக பெயரில் வந்தால் மிகுதியாக விளங்கும். முதல் எழுத்தாக வந்தாலும் இப்பலன்கள் தெரியும். (மற்றபடி நடுவில் வந்தால் மற்ற எழுத்துக்களை அனுசரித்தே பலன் தரும்).

விஷயங்களை நன்கு கிரகித்து தீவிரமாய் யோசித்த பின்னரே அற்புதமான கருத்துக்களை வெளியிடுவர். பலருடன் பழகினாலும் மனம் ஏகாந்தத்தை நாடும். உலகம் முழுதும் நன்மையடையக் கூடிய காரியங்களில் மனம் செல்லும். தெய்வ பக்தியும் ,நம்பிக்கையும், பூரணமாக இருக் கும். பகலைவிட இரவே இவர்கட்கு மனோ சக்திகளை வளர்க்கும்(அப்பியாசம் புரிய). விவரிக்க முடியாத அளவு பெரிதும் ஆழ்ந்தது மான இந்த சப்தமே ஓங்காரத்தின் ஆரம்பம்.

'Z' (அலைநீளம் 7) எல்லா பிரதான வர்ணங்களையும் வீசும். புத்தியைக் கூர்மையாக்கும். வெற்றிபெறுவதற்கு அவசியமான எல்லாக் குணங்களும் அமைந்திருக்கும். பேச்சிலே நயமும் தந்திரமும் மிருதுத் தன்மையும் புலப்படும். காரியவாதி, ஜெயமுண்டு. அதிக கவலையும் நரம்புச் சோர்வும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

*7திகதிகளில் பிறந்த சில பிரமுகர்கள்:*

| பெயர் | பிறந்ததிகதி | எண்கள் |
|---|---|---|
| (மேடம் மேரி க்யூரி - | 7.11.1867 | 7&4 |
| ரேடியம் கண்டுபிடித்த அம்மையார்) | | |
| எலிஸபெத் மஹாராணியார் | 7.9.1533 | 7&1 |
| (திருமணமே புரிந்துகொள்ளாமலிருந்தவர்) | | |
| (ஸர்.ஜேம்ஸ் எங் ஸிம்சன்- | 7.6.1811 | 7&6 |
| உலகிற்கு குளோரபாம் எனும் மயக்கமருந்தைக் கண்டு பிடித்து உதவியவர்) | | |
| (சார்லி சாப்ளின் - | 16.4.1889 | 7&1 |
| நகைச்சுவை மன்னர் இவரது சொந்தப் பெயர் Charles Spencer Chaplin என்பதே. விசித்திர மனப் போக்குடைய அறிவாளி. | | |
| (கூக்ளில்மோ மார்க்கோனி - | 25.4.1874 | 7&4 |
| ரேடியோவின் சிருஷ்டிகர்த்தா) | | |

(தொடரும்)

## ஆன்மீக ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி தலைவர் த. முருகானந்தா தலைமையில் ஆன்மீக ஒன்றுகூடல் நிகழ்வினை இராமகிருஷ்ண சமிதி நடாத்தவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள ஸ்ரீமத் சுவாமி பிரகாசமயானந்தா இறைநாமத்தின் மகிமை எனும் பொருளில் விசேஷ ஆன்மீக உரையை வழங்கவுள்ளார். அத்துடன் பஜனை தீப ஆராதனை என்பனவும் இடம்பெறும். (ஓ)

## உலக காச நோய் தினம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கலைநிகழ்வும், நாளை காலை 9.30 மணிக்கு நடாத்தப்படவுள்ளது. இதில் பங்குபற்றும் அனைவருக்கும் காசநோய் தொடர்பான வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு உடனடியாக மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். இதில் அனைத்து பொதுமக்களும் மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் நான்காம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சிகள் 9மணிக்கு ஆர். சிவகுமார் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நல்லூர் சாரங்கன் இசைக்கல்லூரி மாணவிகள் வழங்கும் குழு இசையும், இளங்கலைஞர் மன்ற மாணவிகளின் வீணை இசையும், திருமதி சுகன்யா அரவிந்தன் குழுவினரின் இசைக் கச்சேரியும், கொக்குவில் கலா பவன மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.

பி.பகல் 2மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் இளங்கலைஞர் மன்ற மாணவர்க ளின் குழு இசை, மிருதங்க இசை , திருமதி சிவரஞ்சனி ரமணாவின் இசையரங்கு, எல். திலகநாயகம்போல் இசைக்கச்சேரி, கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும். (ஓ)

# ஹேமச்சந்திரனை படுகொலை செய்துவிட்டனரென வைத்தியசாலை சென்று வீடு திரும்பிய தந்தை கூறினார்

## திருமலை மாணவர் படுகொலை விசாரணையில் சகோதரன் சாட்சியம்

(கொழும்பு)

பதற்றமும் கலவரமும் கலந்த நிலையில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய தந்தை, ஹேமச்சந்திரனை படுகொலை செய்துவிட்டார்கள். அவனது சடலத்தை வைத்தியசாலையில் பார்த்தேன் என்று என்னிடம் தெரிவித்தார் என திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சியமளித்த ஹேமச்சந்திரனின் சகோதரன் பாஸ்கரன் யோகராஜா தெரிவித்தார். ஹேமச்சந்திரனின் 90 ஆவது நாள் கிரியைகளில் கலந்துகொண்ட எனது மூத்த சகோதரன் கோடீஸ்வரனையும் மூதூரில் சுட்டுக்கொன்றுவிட்டனர் என்று அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி திருகோணமலையில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை கடந்த 13 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது. செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்று வருகின்ற விசாரணைகளில் கொல்லப்பட்டவரான ரஜிஹரின் தந்தையான வைத்திய கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன், சம்பவத்தில் படுகாயமடைந்து உயிர்பிழைத்த பரராஜசிங்கம் கோகுல்ராஜ், படுகொலை செய்யப்பட்ட ஹேமச்சந்திரனின் தந்தை பொன்னுத்துரை யோகராஜா ஆகியோர் இதுவரையில் சாட்சியமளித்துள்ளனர்.

இந்த வரிசையில் கடந்த வியாழக்கிழமை ஹேமச்சந்திரனின் சகோதரரான பாஸ்கரனும் சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தார்.

ஆணைக்குழுவால் பாஸ்கரனிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன் மற்றும் பொன்னுத்துரை யோகராஜா ஆகியோர், திரையில் தோன்றி சாட்சியளித்த அதேவேளை பரராஜசிங்கம் கோகுல்ராஜ், பாஸ்கரன் ஆகியோர் தங்களது பாதுகாப்புக் காரணங்களுக்காக திரைமறைவில் இருந்தே சாட்சியமளித்திருந்தனர்.

சர்வதேச சுயாதீன பிரதிநிதி பெற்ற நபர்களின் குழு ஏற்பாடு செய்திருந்த இந்தச் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக சாட்சியமளித்த பாஸ்கரன் மேலும் கூறியதாவது,

சம்பவம் இடம்பெற்ற 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் திருகோணமலையிலேயே இருந்தேன். ஜனவரி மாதம் 2ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் சகோதரன் ஹேமச்சந்திரனும் அவரது நண்பர்களும் எமது வீட்டு கேற்றடியில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அதிரடிப்படையினர் அவர்களிடம் அடையாள அட்டைசோதனை நடத்தியுள்ளனர். ஹேமச்சந்திரன் அடையாள அட்டையை எடுப்பதற்காக வீட்டுக்கு ஓடி வந்தபோது அவருக்குப்பின்னால் அதிரடிப்படைவீரர் ஒருவரும் ஓடிவந்து சகோதரனைத் தாக்குவதற்கு முற்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவங்கள் இடம்பெற்ற போது நான் வீட்டினுள்ளேயே இருந்தேன். எனது பெற்றோரின் ஊடாகவே இவைகளைத் தெரிந்துகொண்டேன்.

அக்காலகட்டத்தில் திருகோணமலையின் சூழ்நிலைகள் மோசமாக இருந்தமையினால் நான் வீட்டை விட்டு வெளியே செல்வதில்லை. எனது பெற்றோரால் எனக்கு வெளியே செல்ல வேண்டாம் என பணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினாலேயே நான் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. இதனால் வீட்டுக்கு வந்த அதிரடிப்படை வீரரையும் என்னால் பார்க்கமுடியாமல் போய்விட்டது. அதிரடிப்படை வீரர் வீட்டை விட்டு சென்றுவிட்ட சிறிதுநேரத்தில் பாரிய வெடிப் புச் சத்தம் ஒன்று கேட்டது. அப் போது (காஸ் சிலிண்டர்) எரிவாயு தாங்கி ஒன்று வெடித்திருக்கும் என்று நான் வீட்டாரிடம் கூறினேன்.

இல்லை அது குண்டுவெடித்ததற்கான சத்தமே என்று கூறிய எனது தந்தை. ஹேமச்சந்திரன் வெளியில் சென்றிருக்கிறான் போய் பார்த்து வருகிறேன் என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்றார்.

தந்தை வீட்டை விட்டுச்சென்று இருபது நிமிடங்களில் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அதில் சுமார் 20 முதல் 30 ரவைகள் தீர்க்கப்பட்டிருக்கலாம் என நம்புகின்றேன்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டு 10 நிமிடங்கள் தாமதமாகவே தந்தை வீட்டுக்கு ஓடிவந்தார். அப்போது அவர் பதற்றத்துடன் இருந்ததை உணர்ந்து கொண்டேன். என்ன நடந்தது எனக் கேட்டபோது தற்போது. தற்போது கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுக்கு மத்தியில் ஹேமச்சந்திரனின் கூக்குரலும் கேட்டது.

"அம்மா காப்பாற்றுங்கள் ஐயோ காப்பாற்றுங்கள்" என்ற சத்தங்கள் கேட்டன. என் மனதிற்குள் குழப்பமாக இருக்கின்றது. நான் வைத்தியசாலைக்கு சென்று வருகிறேன் என்று கூறியவாறு புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கும்போது சண்முகராஜா என்பவரும் அங்கு ஓடிவந்தார். அவரும் படபடப்புடனேயே காணப்பட்டார்.

சண்முகராஜாவின் மகனும் ஹேமச்சந்திரனும் நெருங்கிய நண்பர்கள். முதலாம் தரத்திலிருந்து ஒன்றாகப் பயில்பவர்கள். விடயத்தை விளங்கிக்கொண்ட சண்முக ராஜாவும் எனது தந்தையாரும் வைத்திய சாலைக்குச் சென்றனர்.

இதன்பின்னர் சிறிதுநேரத்தில் பதற்றமும் கலவரமும் ஒன்றாகக் கலந்ததொரு நிலையில் வந்த தந்தை மகன் ஹேமச்சந்திரனை படுகொலைசெய்துவிட்டார்கள். அவரது சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்த்துவிட்டே வருகிறேன் என்று கூறினார். அவர் கூறிய இந்த மிகமோசமான துயரச் செய்தியை தாயாரிடம் ஆறுதலாகவும் பக்குவமாகவும் கூறினோம்.

படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 3 மாதத்தின் பின்னர் திருகோணமலைக் கடற்கரை வீதியில் உள்ள காந்தி சிலைக்கு அருகில் படுகொலை செய்யப் பட்ட மாணவர்களது 90 ஆம் நாள் ஆத்மசாந் திக் கிரியைகள் இடம் பெற்றன. இக் கிரியை யில் எனது மூத்த சகோதரரான கோடீஸ்வரனும் கலந்துகொண்டிருந்தார். ஆனால் அவரும் இப்போது எம்முடன் இல்லை.

'அக்சன்பெய்ம்' தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய அவர் மூதூரில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டு விட்டார். இவருடன் மொத்தமாக 17ஊழியர்கள் இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினர்.


அத்துடன் முடிவடைந்த விசாரணைகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை தொடரவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-5)

# சீன ஒலிம்பிக் போட்டியை புஷ் புறக்கணிக்கமாட்டார்

## அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

திபெத்தில் கலவரம் நடைபெற்று வருவதன் காரணமாக சீன ஒலிம்பிக் போட்டியை புஷ் புறக்கணிக்க மாட்டார் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.



**திபெத்தில் கலவரம்**

உலகின் கூரை என்று அழைக்கப்படும், திபெத் தனி நாடாக இருந்து வந்தது. அந்நாட்டை சீனா பல ஆண்டுகளுக்கு முன் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அது முதல் திபெத் சீனாவின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் சீனாவுடன் திபெத் இணைக்கப்பட்டதை எதிர்த்து நடந்த புரட்சி தோல்வி அடைந்த தினம் கடந்த 14ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. அப்போது திபெத் தலைநகர் லாசாவில் சீனாவுக்கு எதிராக கலவரம் வெடித்தது.

பின்னர் அருகில் உள்ள கான்சு, சிச்சுவான் மாகாணங்களுக்கும் கலவரம் பர வியது. கான்சுவில் உள்ள ஷியாகே, மாகு, லுகு, ஜோனே போன்ற நகரங்களில் கடைகள், அரசு கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டது.

பல இடங்களில் கலவரக்காரர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பலர் பலியானார்கள்.

மேலும் திபெத்தியர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களுக்கு சீனா கூடுதல் இராணுவத்தை அனுப்பி வைத்துள்ளது.

வன்முறை சம்பவங்களில் 13பேர் உயிரிழந்து விட்டதாக சீனா கூறியுள்ளது. ஆனால் 100க்கும் மேற்பட்ட திபெத்தியர்கள் கொல்லப்பட்டதாக திபெத் தலைவர்கள் தெரிவித்தனர்.

**புஷ் புறக்கணிப்பு இல்லை**

இந்த பரபரப்பான சூழ்நிலையில் சீனாவில் அடுத்த ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதை புறக்கணிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தன.

**உலக தரிசனம்**

ஆனால் அந்த கோரிக்கையை புஷ் நிராகரித்து விட்டார். திபெத்தில் நடைபெற்று வரும் சம்பவங்கள் ஜனாதிபதியின் பயணத்தை பாதிக்காது என்று வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் டானா பெரினோ கூறினார். (அ)

# பனிக்கண்டத்தில் ஆராய்ச்சி கப்பல்



அன்டார்டிக் கடல்பகுதியில் நியூசிலாந்துக்கு அருகே உள்ள ரோசா கடல் பகுதியில் அபூர்வ வகை உயிரினங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது:

இது பற்றி ஆராய்ச்சி நடத்த நியூசி லாந்தின் ஆராய்ச்சி கப்பல் பனிக்கட்டிகளை உடைத்துக்கொண்டு அந்த பகுதிக்கு செல்லும் காட்சி. (அ)

## 5 வயதில் தான் முதல் சோறு

பிறந்து முதலே வயிற்றுக்கு நேரடியாக குழாய் மூலம் உணவு செலுத்தப்பட்டு வந்த குழந்தை முதன் முறையாக தனது 5ஆவது வயதில் தான் உணவு டேஸ்ட்டை உணர்ந்தது. பிரிட்டனைச் சேர்ந்த நிக்-மெல் குளோனிங் தம்பதியின் மகன் லீயோ பிறக்கும் போது இதயத்தில் ஓட்டை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதனால் வாய் வழியாக பால்புகட்டவோ உணவு சாப்பிடவோ முடியாது. குழாய் மூலம் உணவு செலுத்தப்பட்டு வந்தது. சில மாதம் முன் ஆஸ்திரியாவில் உள்ள மருத்துவ மனையில் லியோ சேர்க்கப்பட்டான். அவனுக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. இப்போது அவனுக்கு இருந்த இதயக் கோளாறு நீங்கிவிட்டது.

பிறந்த போதே இதயத்தில் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அப்போது உடல் வளர்ச்சி இல்லாததல் அறுவைச்சிகிச்சை செய்வது மிக ஆபத்தானது என்று கைவிடப்பட்டது. அதற்காக இத்தனை ஆண்டுகள் காத்திருக்கவேண்டியதாகி விட்டது. இப்போது மிகவும் சிக்கலான அறுவைச் சிகிச்சையாகத்தான் இருந்தது. எங்கள் கடும் முயற்சிக்கு வெற்றி கிடைத்தது என்று அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர்கள் கூறினர். (அ)

# நான் இறந்தாலும் திபெத் போராட்டம் ஓயாது

## புத்தமதத் தலைவர் தலாய்லாமா அறிவிப்பு

(வாஷிங்டன்)

திபெத்தில் நடைபெற்று வரும் போராட்டம் குறித்து புத்த மதத் தலைவர் தலாய்லாமா ஒரு ஆங்கில வாரப் பத்திரிகைக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

சீனாவில் இருந்து விடுதலை பெற்று தனி நாடாக செயல்பட திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

திபெத்திய இளைஞர்களிடம் இந்த உணர்வு அதிகம் காணப்படுகிறது. நான் இறந்து விட்டாலும் இந்த போராட்டம் ஓய்ந்து விடும் என்று சீனா நினைக்க வேண்டாம். நான் இறந்து விட்டால் இந்த போராட்டம் ஓயாது இன்னும் அதிகரிக்கும்.

திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று நான் ஒரு போதும் கூறமுடியாது அப்படி நான் கூறினால் மக்கள் என்னை பார்த்து சிரிப்பார்கள். திபெத்தை சீனா ஆக்கிரமித்துள்ளது.

திபெத் தனிநாடாக ஆனால் சீனாவுடன் பகையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் அல்ல. இரு நாடுகள் நட்புடன் செயல்பட முடியும். ஐரோப்பிய யூனியனில் பல்வேறு நாடுகள் ஒற்றுமையாக செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு தலாய்லாமா கூறினார். (அ)

# பற்றி எரிகிறது அமைதி பூமி! வெற்றி பெறுமா திபெத்?

சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக திபெத்தில் நடந்து வரும் போராட்டங்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். மாறிவிட்ட இந்த உலகில் இன்னும் சீனாவின் காலனியாதிக்கம் திபெத்தில் தொடரக்கூடாது என்று திபெத்தியர்கள் எதிர்க்கிறார்கள். இதனால் தான் அமைதிக்குப் பெயர் எடுத்த திபெத் கடந்த அரை நூற் றாண்டு காலமாக பிரச்சினைகளால் பற்றி எரிகிறது. சுதந்திர நாடாக இருந்த திபெத்தில் 1949ஆம் ஆண்டில் 35ஆயிரம் சீன துருப்புக்கள் புகுந்து ஆக்கிரமித்தனர்.

அப்போது ஏராளமானோர் கொல்லப்பட்டனர். 1949-71ஆம் ஆண்டு காலத்தில் மட்டும் ஏறத்தாழ 12 இலட்சம் திபெத்தியர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது. அதன் பின் இன்று வரை இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுள்ளது. இமாலய மலைப்பகுதி நாடுகள் எப்போதும் சீனாவின் வசம் இருந்ததில்லை. அவ்வப்போது சீன ஆதிக்கம் இருந்த போதிலும் கூட அவர்கள் இங்கு நிலையாக ஆட்சி செய்ததில்லை.

1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட்களின் கைகளில் சீனா விழும் போது கூட திபெத் சுய ஆட்சிப் பகுதியாகவே இருந்தது. ஆகவே சுய ஆட்சிதான் ஒரே தீர்வு என்கிறார்கள் திபெத்தியர்கள். 13ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து திபெத் சீனாவின் ஒரு பகுதிதான். அதை மாற்ற யாராலும் முடியாது என்கிறது சீன அரசு. எனவே அது பீஜிங் நிர்வாகத்தின் கீழ்தான் வர வேண்டும் என்றும் சீனா பிடிவாதம் பிடிக்கிறது. இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் உள்ள பீஜிங்கில் நடக்கின்றன. ஆகவே திபெத் மற்றும் தைவான் அணிகள் அதில் பங்கேற்க விடாமல் ஒருங்கிணைந்த சீன அணி ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் என்று சீனா அறிவித்திருந்தது. இது திபெத் மக்களிடையே கோபத்தை அதிகரிக்கச் செய்திருந்தது. சீனாவுக்கு எதிராக முதல் போராட்டம் நடந்த 49ஆம் ஆண்டு மார்ச் 10 நினைவு தினத்தையொட்டி திபெத்தில் மீண்டும் சீன எதிர்ப்பு போராட்டம் தீவிரமானது. பல்வேறு நாடுகளில் வசிக்கும் திபெத்தியர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் போராட்டங்களையும் நடத்தி வருகிறார்கள்.

திபெத் தலைநகர் லாசா அருகில் உள்ள துருபங் மடத்திலிருக்கும் புத்தபிக்குகளும் போராட்டத்தில் குதித்ததால் திபெத் முழுவதும் போராட்டம் வலுவானது. சீனாவில் வசிக்கும் திபெத்தியர்களும் போராட்டத்தில் குதிக்கத் தொடங்கினர். சீனாவின் அதிகாரத்தால் திபெத்தில் உள்ள முக்கிய வேலைவாய்ப்புகள் அனைத்தும் வந்து குடியேறும் சீனர்களுக்கே வழங்கப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சியில் உள்ளூர் திபெத்தியர்களுக்கு பயனில்லாத சூழ்நிலையே நிலவுகிறது. அமைதிப் பூமியான திபெத்தை அணுகுண்டுகளை பதுக்கும் இடமாகவும் அணுக்கழிவுகளை கொட்டும் இடமாகவும் சீனா உபயோகப்படுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. இந்தியாவில் தஞ்சம் புகுந் துள்ள தலாய்லாமா இந்தியாவிலிருந்தே திபெத் அரசை வழி நடத்திவருகிறார். இவருக்கும் சீன அரசுக்கும் இடையே அவ்வப்போது கடைமட்ட அளவிலான பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. சீனாவின் முக்கிய உயர் அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் இடம்பெறாத இப் பேச்சு வார்த்தைகளால் உடனடியாக திபெத் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்போவதில்லை. திபெத் தனிநாடாக வேண்டும் என்ற தலாய்லாமாவின் உறுதிப்பாட்டால் இந்த பேச்சுவார்த்தையிலும் முன்னேற்றம் இல்லை. அமைதியான வழியில் தனிநாடு வேண்டும் என்று தலாய்லாமா போராடி வருவதாலும் அந்த அமைதி வழியிலேயே பல்வேறு நாடுகளில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாலும் அவருக்கு 1989ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆகவே திபெத் என்றால் எல்லோருக்கும் தலாய்லாமாவின் முகம் மட்டுமே ஞாபகம் வரும் அளவுக்கு அவர் பிரபலம் ஆகிவிட்டார். திபெத்தியர்கள் எல்லாம் ஒலிம்பிக் போட்டிகளுக்கு எதிரானவர்கள் என்று சீனா சித்தரித்து வருகிறது.

அத்துடன் திபெத்தை ஒரு பூட்டிய வீடாக்கி விட்டது சீனா. வெளிநாடுகளிலிருந்து திபெத்துக்குள்ளோ அல்லது அங்கிருந்து வெளிநாடுகளுக்கோ யாரும் செல்ல முடியாத சூழ்நிலையை உருவாக்கி புத்த மடங்களில் எல்லாம் இராணுவ காவல் போட்டுள்ளது. திபெத் பிரச்சினையில் சீனா விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை இல்லாததால் திபெத் பிரச்சினை தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.



தவிக்கிறார் தலாய்லாமா: சீனாவுக்கு எதிராக ஐ.நா. மற்றும் அமெரிக்கா எதுவும் செய்ய முடியாததால் திபெத்தின் எதிர்காலம் குறித்து தலாய்லாமா கவலைப்பட்டுள்ளார். திபெத்தில் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்தபோது 1950 ஆம் ஆண்டில் 16 வயதாக இருக்கும் போதே தலாய் லாமா திபெத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். 1954 ஆம் ஆண்டில் அவர் மாசே துங்க உள்ளிட்ட தலைவர் களை சந்தித்துப் பேசினார்.

1956ஆம் ஆண்டில் புத்தரின் 2,500 வது ஜெயந்தி கொண்டாட்டங்களின் போது பிரதமர் நேருவையும் சந்தித்தார். 1959ஆம் ஆண்டு சீனாவின் ஆதிக்கத்தால் தலாய்லாமா இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இமாச்சல் பிரதேசத்தில் உள்ள தரம்சாலாவில் அவர் தங்கியுள்ளார். 1959,1961 மற்றும்1965ஆம் ஆண்டுகளில் திபெத் குறித்து ஐ.நா. பொதுச்சபையிலும் தலாய்லாமா கோரிக்கை வைத்துள்ளார். சீனாவுக்கும் இந்தியாவுக்கும் ஏற்கனவே எல்லைத்தகராறு உள்ளது. ஆகவே இந்தியாவைப் பொறுத்தவரை திபெத் பிரச்சினை பெரிதாகும் போதெல்லாம் தர்மசங்கடமான நிலை தான் ஏற்படுகிறது. இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள திபெத்தியர்கள் சீனாவில் புகுந்துவிடாமல் இருக்கவும் அவர்கள் சீன இந்திய உறவுகளில் பிரச்சினை ஏற்படுத்தாமல் இருககவும் இந்தியா முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**பிரச்சினை வளர்ந்த வரலாறு!**

1950 அக்: சீனா துருப்புக்கள் திபெத்துக்குள் நுழைந்தன. அதற்கு ஓர் ஆண்டுக்கு முன்புதான் மாசேதுங் தலைமையிலான கம்யூனிஸ்ட்கள் உள்நாட்டுப் போரை நடத்தி சீன மக்கள் குடியரசை நிறுவினார்கள்.

## திபெத் போர் ஒரு கண்ணோட்டம்

1954 செப்: தலாய்லாமா -மாவோ சந்திப்பு.

1959 மார்ச்: நிலப்பண்ணை முறையை திபெத்திலும் ஒழிக்க சீனா முடிபு செய்ததை அடுத்து அங்கு பெரிய போராட்டம் வெடித்தது. இதில் ஆயிரக் கணக் கானோர் கொல்லப்பட்டனர். திபெத் உரிமைகளுக்கான முதல் போராட்டம் இது தான்.

1965: திபெத் சுயாட்சிப் பகுதி என்று பிரகடனப் படுத்தப்பட்டது.

1966 : திபெத்தில் மடங்கள் நொறுக்கப்பட்டன. பிக்குகள் விரட்டியடிக்கப்பட்டு அவர்கள் அலங்கோலப்படுத்தப்பட்டு துறவி வாழ்க்கையை விட்டு சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப கட்டாயப்படுத்தப்பட்டனர். புத்தர் சிலைகள் நொறுக்கப்பட்டன. திபெத்தில் கலாச்சார சீரழிவை சீனா ஏற்படுத்தியதாக பல்வேறு நாடுகள் குற்றம் சாட்டின.

1989 அக்: தலாய்லாமாவுக்கு அமைதி நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1990:திபெத்தில் ஜனநாயகம் திரும்பும் முயற்சியாக 1991 ஆம் ஆண்டு தேர்தல் நடக்கும் என்று அறி வித்தார்.

1993: ஆகஸ்: திபெத்தில் தன்னாட்சிக்காகத் தான் போராடுகிறோம். சுதந்திரத்திற்காக அல்ல என்று தலாய் லாமா பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித் தார்.

1994: எந்த முன்னேற்றமும் இல்லாததால் பேச்சு வார்த்தைகளை நிறுத்தி வைப்பதாக தலாய் லாமா அறிவித்தார்.

1995 மே:சிறுவன் நியிமாவை 11ஆவது பஞ்சன்லாமாவாக தலாய்லாமா நியமித்தார். இதற்கு போட்டியாக டிசம்பரில் சீன அரசு இன்னொரு சிறுவனை 11ஆவது பஞ்சன் லாமாவாக நியமித்தது.

1996 ஜுன்:திபெத் தேர்தலை அடுத்து தலாய் லாமா தஞ்சம் புகுந்துள்ள இடத்திலிருந்தே புதிய அர சுக்கு பொறுப்பேற்றுக் கொண்டார்.

1999ஜன: திபெத்தின் மூன்றாவது முக்கிய துறவி யான 14 வயதான கர்மபலாமா சீனாவிலிருந்து தப்பி தலாய்லாமாவை பார்க்க இந்தியா வந்தார்.

2006ஜுலை:உலகின் மிக உயரமான கின்காய் திபெத் ரயில்வேயை சீனா துவக்கிவைத்தது.

2008மார்ச் : சீனாவுக்கு எதிரான போராட்டத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

(அ-5)

# தீவுப் பகுதியின் இடஞ்சார்பு

# அபிவிருத்தித் திறமுறைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

விவசாயத்துக்கு அடுத்து தீவுப் பகுதியில் மீன்பிடித்தொழில் விருத்திக்கு நல்ல வாய்ப்புக்கள் உண்டு. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, செட்டிபுலம், துறையூர், அம்பிகை நகர், மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு, தம்பாட்டி ஆகியன வேலணைத்தீவில் முக்கிய மீன்பிடி குடியிருப்புக்களாகும். இதேபோல் எல்லாத் தீவுகளிலும் மீன்பிடி இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன், யாழ்ப்பாணப் பகுதி மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு கடற் பரப்புக்களில் தொழில் செய்கின்றனர். இன்றைய நாட்டு நிலைகளால் மீன்பிடி பல வழிகளில் பாதிக்கப்பட்டு, பெரிய அளவு செய்யமுடியாது. இருப்பினும், வரும் காலத்தில் பெரியளவில் விருத்தி செய்யக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

மீன்பிடிக்கு அடுத்து இப் பிரதேசம் பனை சார் தொழில்கள் மேற்கொள்வதற்கு ஏற்ற பனை வளம் கொண்டது. அண்மைக் காலங்களில் தீவுப் பகுதியின் குறிப்பாக வேலணைத்தீவின் பனைவளம் அழிவுக்குட்பட்டபோதும், குறிப்பிடத்தக்க வளம் இன்றும் இருக்கின்றது.

**அபிவிருத்திப் பாதையில் தீவகம்**

தீவுப் பகுதியின் இன்றைய குடிசனத்தொகை 48ஆயிரம் எனக் கொள்ளலாம். சமாதானம் பிறக் குமானால் ஒரு சில ஆண்டுகளில் இதன் சனத் தொகை மிகத் துரிதமாக அதிகரித்து ஒரு இலட்சத்தை அடையும். இதனால் இப்பிரதேசத்து மக்களின் சமூக-பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதொரு சிறுநகர் வேலணை- வங்களாவடியில் அமைக்கப்பட வேண்டும். இன்று பல அரசாங்க காரியாலயங்களைக் கொண்டிருக்கும் வங்களாவடி செயலடிப் படையிலும், பௌதீக ரீதியாகவும் விருத்தி செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் நிர்வாக/சேவை அடிப்படையில், யாழ்ப்பாணம், கொடிகாமத்துக்கு அடுத்த, வேலணை- வங்களாவடி மூன்றாவது முக்கிய நிர்வாக மையமாக விருத்தி செய்ப்பட வேண்டும். இச் சேவை மையம் தீவுகள் முழுவதற்கும் பொறுப்பான காரியாலயங்கள், உயர்மட்ட வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல பொருட்களையும், சேவைகளையும் வழங்கும் இடமாக இருக்கவேண்டும். தீவுப் பகுதியின் முன்னணிக் கல்வி நிலையமாக வேலணை மத்திய மகா வித்தியாலயம் விளங்குகின்றது. இக் கல்லூரியைச் சார்ந்து தீவுப் பகுதிக்குரிய தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். இதேபோல் ஒவ்வொரு தீவின் குடிசனத் தொகை, பொருளாதாரப் பண்புகளுக்கு ஏற்ப சிறிய சேவை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**புங்குடுதீவும் அதன் அபிவிருத்தியும்**

புங்குடுதீவில்- பெருங் காட்டுச் சந்தி ஒரு முக்கிய சேவை மையமாக விருத்தி செய்யப்படவேண்டும். புங்குடுதீவு 1981 இல் 15ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தது. இன்று 4274 மக்களே வாழ்கின்றனர். இடப்பெயர்வால் பெரிதும் பாதிக்கப்பட்ட தீவாகவுள்ளது. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான மெய்யாதனங்கள், வீட்டு வளங்கள் கவனிப்பாரற்று இருப்பது டன், சமூக விரோத சக்திகளால் வீடுகளின் பொருட்கள் களவாடப்படுகின்றன. இங்கு காணப் படும் வீடுகளில் மிகக் கூடிய விகிதம் 1970 களின் கட்டப்பட்டதால், மிகவும் நல்ல நிலையில் இருக்கின்றன. இவ் வீடுகள் அழியா வண்ணம் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமான செயற்பாடாக இருக்கின்றது. இக்கிராமத்தில் இன்று வாழும் மக்கள் கூடியளவு வறுமைக்குட்பட்டவர்களாகவும், உதவிகளை எதிர்பார்ப்பவர்களாக இருக்கின்றார்கள். விவசாயம் இங்கு முக்கியத் துவம் பெறவில்லை. மீன்பிடியும் உள்ளூர் மக்களால் பெரியளவில் மேற்கொள்ளப்படுவ தில்லை. இங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மக்கள் பிற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கிராமத்தின் பொருளாதார நடவடிக்கைகள் விவசாயம் சாராத துறை வளர்ச்சியில் தங்கியுள்ளது. முன்னர் இக் கிராமத்தவர்கள் இலங்கையின் பல நகரங்களில் வியாபார முயற்சியில் ஈடுபட்டு பெரும் செல்வம் ஈட்டினர். ஆனால் இப் பிரிவினர் இன்று புங்குடுதீவில் இல்லை. இவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் சுவிற்சர்லாந்து, கனடா, பிரான்ஸ் போன்ற பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். மேலும் ஒரு தொகையினர் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகர்களில் வாழ்கின்றார்கள்.

புங்குடுதீவின் வளர்சிக்கு, பெருங் காட்டுச் சேவை மைய வளர்ச்சி முக்கிய பங்கை வகிக்க முடியும். இங்கு மகாவித்தியாலயம், தபாற் கந்தோர், கிராமிய வங்கி, ஆஸ்பத்திரி, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கமநல சேவை மையம் ஆகியன அமைந்துள்ளன. இங்கு ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமைக்கப்பட வேண்டும். புங்குடுதீவு- நயினாதீவு ஆகிய இரு தீவுகள் இப் பிரிவுள் உள்ளடக்கப்பட வேண்டும்.


**நெடுந்தீவு**

நெடுந்தீவு 6ஆயிரம் மக்களையும் 4 ஆயிரத்து 717 ஹெக்ரர் பரப்பையும் உடையது. இத்தீவின் குடிசனத் தொகை ஏறக்குறைய இவ்வளவிலேயே பல தசாப்தங்களாக தொடர்ந்து இருந்து வருகின்றது. இத் தீவின் இடவமைவு காரணமாக பல பிரச்சி னைகளை எதிர்கொள்கின்றது. இது தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச செயலகம், மற் றும்பல அரசாங்க காரியாலயங்கள் இங்குள்ளன.

இக் காரியாலயங்களில் கடமை புரிகின்றவர்களில் பெரும்பான்மையினர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர்களாக இருப்பதாலும், கஷ்டப் பகுதியாக இருப்பதாலும், அபிவிருத்தியை முன்னெடுப்பது கடினமாக இருப்பதுடன் மக்கள் சிறந்த சேவைகளைப் பெறமுடியாது உள்ளனர். மேலும் இத்தீவின் வளர்ச்சிக்கு, உள்ளூர் போக்குவரத்து, குடிநீர், மின்சாரம் ஆகியன விருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புகள் இருப்பதால் இத் துறை வளர்ச்சிக்கு முக்கியம் கொடுக்கலாம்.

**நயினாதீவு**

இன்று 3ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களையும் 422 ஹெக்ரர் பரப்பையுமுடையதாக உள்ளது. இது இந்து, பௌத்த யாத்திரிகர்கள் பெருமளவில் வந்து போகு மிடமாக இருந்து வருகின்றது. இதனால் யாத்திரிகர்கள் தங்கும் விடுதிகள் வளர்ச்சிக்கு இடமுண்டு. தீவின் இறங்கு துறைகள் நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும், வங்களாவடியிலும் பௌத்த விகாரைக்கு அருகிலும், அமைந்துள் ளன. தீவின் பொருளாதாரம் விவசாயம் சாராத பண்பைக் கொண்டது. உள்ளூர் விவசாயம், மீன்பிடி மற்றும் வீட்டுத் தென்னைத் தோட்டங்களிலிருந்து மக்கள் குறிப்பிடத்தக்க வருமானத் தைப் பெறுகின்றனர். இக் கிராம மக்கள் கல்வி, வர்த்த கத்தில் சிறந்து விளங்குகின்றார்கள். யாழ்ப்பாண நகரிலும், கொழும்பிலும் வர்த்தகத் திலும் அரச சேவைகளிலும் முக்கிய இடங்களைப் பெற்றுள்ளனர். -இத்தீவின்




பொருளா தாரம், விவசாயம் சாராத பண்பையே கொண்டு இருக்கும்.

**அனலைதீவு**

3ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களையும் 526 ஹெக்ரர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவில் குறிப்பிடத்தக்க விவசாய நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இத்தீவில் மத்தியில் காணப்படும் சேவை மையத்தில் ஆஸ்பத்திரி, உயர்தரப் பாடசாலை, உப தபாற் கந்தோர், கிராமசபை காரியாலயம், கூட்டுறவுக் கடை மற்றும் சில சிறு வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன.

இத்தீவு பரப்பில் சிறியதாக இருப்பதாலும், மக்கள் அடர்த்தி உயர்வாக இருப்பதாலும், இக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்வதாலும் இங்குள்ளவர்கள் ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கின்றனர். போதிய ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றாக்குறைவால் இங்கு கிடைக்கும் சேவைகள் போதாமல் இருக்கின்றன. விவசாயம், மீன்பிடி, சுற்றுலா அடிப்படையில் இத்தீவின் பொருளாதாரம் விருத்தி பெற வாய்ப்புண்டு. எனினும் மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு போதிய சேவை வசதிகள் கிடைக்க வேண்டும்.

**எழுவைதீவு**

675 மக்களையும் 2 சதுரகிலோமீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு இந்து, கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றனர். இதனால் இரு பிரிவினரது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளன. அல்லாதுவிடின் உறவு சீர் குலைந்து விடும். மீன்பிடி, பனைசார் தொழில்கள் முக்கியமாக இருக்கின்றன. எதிர்கா லத்தில் பெரிய எடுப்பில் சுற்றுலாத்துறை விருத்தி செய்ய முடியும்.

**மண்டைதீவு**

மண்டைதீவு 1981 இல் 4ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களையும், 756 ஹெக்ரர் பரப்பையும் கொண்டிருந்தது. இன்று 674 மக்களைக் கொண்டுள்ளது. யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு, இறுக்கமான இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது.

முழுமையான மீள் குடியேற்றம் ஏற்படவில்லை. விவசாயம், மீன்பிடி மற்றும் தொழில்கள் முழுமையாக பழைய நிலைக்கு வரவில்லை. மேலும் இங்குள்ள நிறுவனங்கள் இன்றும் முழுமையாக வினைத்திறன் மிக்கதாகச் செயற்படவில்லை.

இத்தீவு சிறப்பான நிலப் பயன்பாட்டு ஒழுங்கினைக்கொண்டது. இத் தீவில் தென்கிழக்குப் பகுதி தோட்ட நிலங்களையும், மேற்கு, வடக்கு கரையோரப் பகுதி சதுப்பு நிலங்களையும், இதற்கு அடுத்த உட்பகுதி தரவை நிலங்களையும், அடுத்து நெல் வயல்களையும் கொண்டுள்ளன. இத் தீவின் நடுப்பகுதியில் குடியிருப்புகள் காணப் படுகின்றன.

காரைநகர் இன்று 10ஆயிரம் மக்களைக் கொண்டு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. இதன் பரப்பு 2309 ஹெக்டராகும். தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச சபை, மற்றும் கமநல சேவை நிலையம் போன்ற காரியாலயங்கள் மற்றும் கல்வி, சுகாதாரம், வங்கி போன்ற வசதிகளைப் பெற்று முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இங்கு குடிநீர் இன்றும் பெரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

**தீவுப் பகுதியின் அபிவிருத்திக்கான திட்டங்கள்**

தீவுப் பகுதியின் அபிவிருத்திக்கு பின்வரும் திட்டங்களை முன்னெடுத்தால் நல்ல பயன்களைப் பெறலாம்.

1. புளியங்கூடல் சந்தியை ஒரு கைத்தொழில் நடவடிக்கை மையமாக வளர்த்தல். இக் கிராமத்து மக்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்வதில் திறன்மிக்கவர்கள். தீவுப் பகுதியில் கொம்பனி நடத்தியவர்களுள் இக் கிராமத்த வர்களே மின்சார உற்பத்தி இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரம், தூள் அரைக்கும் ஆலை போன் றவற்றை தீவுப்பகுதியல் அறி முகம்செய்து இயந்திரம் சார்ந்த வேலைகளை முன்னெடுத்த வர்கள். இதனால் புளியங்கூடல் சந்தி ஒரு கைத் தொழில் சேவை தொழில் மையமாக வளர வாய்ப்புண்டு.

2. மண்கும்பான் பிள்ளையார் கோயிலடியைச் சூழவுள்ள பிரதேசத்தை விருத்திசெய்வதன் மூலம் ஒரு விவசாயம் சார்பற்ற கிராமத்தை உருவாக்கலாம். இக் கிராமம் யாழ்ப்பாண நகருடன் நெருங்கிய பொருளாதார உறவு கொண்டதாகமாறும். இதற்கு தேவையான நிலம் இங்குண்டு.

3. வேலணை கிழக்கில் குறிப் பாக இடிவிழுந்த குண்டுத் தெற் காக அமைந்துள்ள மணியங் காட்டுப் பகுதியில் பெரிய குடியேற்றத் திட்டம் அமைக்கக் கூடிய நிலவளம் காணப்படுகின்றது. இப் பகுதி பிரதான வீதிக்கு அண்மையாக இருப் பது சிறப்பு அம்சமாகும். மேலும் இக் குடியிருப் புக்குத் தேவையான குடிநீர் சாட்டியில் இருந்து பெறலாம். இக் குடியிருப்பு விவசாயம் சாராத குடியிருப்பாக இருப்பதால், யாழ்ப்பாண நகருடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருக்கும்.

4. ஊர்காவற்றுறை நகரும், துறைமுகமும் புதிய பாணியில் விருத்தி செய்யப்பட வேண்டும். கடல் சார் தொழில்கள் விருத்தி செய்வதன் மூலம் ஊர்காவற்றுறை மீள் எழுச்சிக்கு வழிவகுக்க முடியும். கப்பல் கட்டல், கப்பல் திருத்துதல், மீன்பிடித் தொழில், பொழுதுபோக்கு கப்பல் விடுதல் மற்றும் சுற்றுலா விருத்தி மூலம் புதிய தொழில் கள் உருவாக்க முடியும்.

**திருத்தப்பட வேண்டிய வீதிகள்**

தீவுப் பகுதியின் வளர்ச்சிக்கு பின்வரும் வீதிகள் விருத்தி செய்யப்படவேண்டும்.

1. சுருவில் -சாட்டி கரையோர வீதி- தற்பொழுது சுருவிலிருந்து - துறையூருக்கு கரையோரமாக வீதியமைக்கப்பட்டு, இவ் வீதி வழியாக பஸ்சேவையும் நடைபெறுகின்றது. இவ் வீதி துறையூரிலிருந்து கடற்கரையோரமாக கல்லாண்டமுனங்கு வரை விருத்தி செய்யப்பட்டு, பின்னர் செட்டிபுலம் ஊடாக சாட்டி வரை விருத்தி செய்யப்படவேண்டும். இந்தமுறையில் விருத்தி செய்யப்பட்டால் வேலணைத் தீவின் தெற்குக் கரையோர வீதியாக அமையும்.

2. செட்டிபுலம்- இடிவிழுந்த குண்டு வீதி- இப் பாதை செட்டிபுலம், வெட்டுக்குளம் சந்தியிலிருந்து சாட்டி, உப்புக்குளி, மணியர்காடு, சோள



கன்காடு வழியாக ஊர்காவற்றுறை வீதியை இடிவிழுந்த குண்டு வீதியில் சந்திக்கவேண்டும்.

இப் பாதை அமைக்கப்படின் வேலணை கிழக்கில் காணப்படும் பெருமளவு நிலப்பரப்புக்கு பாதை முகப்பு கிடைக்கும். இப் பாதை, செல்லும் வழி நன்னீர் பிரதேசமாக இருப்பதால் வாழிட நில அபிவிருத்திக்குக் கூடிய வாய்ப்புண்டு.

3. அல்லைப்பிட்டி-நாரந்தனை வீதி

அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களுக்கு ஊடாக கிழக்கு- மேற்காகச் செல்லும் பாதை மண்கும்பான் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அண்ணமார் கோயில், நாவலடிப்புலம், ஆரவயல்பிட்டி, பள்ளம்புலம், சரவணை வழியாக நாரந்தனை சென்மேரிஸ் தேவாலயம் வரை சென்று, ஊர்காவற்றுறை வீதியுடன் இணைக்கப்படவேண்டும். இப்பாதை அமைக்கப்படின் அல்லைப்பிட்டி, மண்கும்பான்வேலணை கிராமங்களின் பெரும் பகுதிக்குப் போக்குவரத்து வசதி கிட்டுவதுடன் இடஞ்சார் அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

4. புங்குடுதீவு சுற்றுப்பாதை- புங்குடுதீவின் தற்போதுள்ள பாதைகளால் இதனது கரையோர பிரதேசங்களை நன்கு பயன்படுத்த முடியாதுள்ளது. இத் தீவினைச் சுற்றி பாதை அமைப்பதால் இத் தீவிலுள்ள குடியிருப்புக்களான மடத்து வெளி, வல்லன் மாவுதடை, குறிகட்டுவான், கழுதைப்பிட்டி, ஊரதீவு ஆகியனவற்றை இணைக்கக் கூடியதாக இருப்பதுடன் கரையோர நிலங்களை சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்த முடியும்.

5. ஊர்காவற்றுறை-சரவணை கரையோரப் பாதை- இப் பாதை வேலணைத் தீவின் வட கரையோரமாக ஊர்காவற்றுறையிலிருந்து விறாட்டி முனை நாரந்தனை வடக்கு வழியாக சரவணை வரைசெல்லும்.

6. சரவணைச் சந்தி-அராலி இறங்கு துறை- இப்பாதை சரவணைச் சந்தியிலிருந்து ஏற்கனவேயுள்ள அணைக்கட்டு வழியாக அராலித் துறை வரை அமைக்கப்படவேண்டும். அராலிப் பாதை அமைக்கப்படின் இப் பாதை மிகவும் பயனுடையதாகும்.

**தரவை நிலமும் சதுப்பு நிலமும்**

தீவுப் பகுதியில் 25%க்கு மேற்பட்ட நிலம் தரவை நிலங்களாகவும், சதுப்புநிலப் பரப்புகளாகவும் இருக்கின்றன. வேலணைத்தீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய தீவுகளில் இத்தகைய பரப்புகள் கூடுதலாகக் காணப்படுகின்றன.


வேலணைத்தீவில் யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை வீதியில் இரு மருங்கும் த்ரவையாக சரவணை வரை காணப்படு கின்றது. இப் பரப்புகள் மாரியில் வெள்ளம் நிறைந்தும், பங்குனி, சித்திரை மாதங்களில் நீர் வற்றி மேய்ச்சல் நிலங்களாக மாறிவிடும்- இத்தரவை நிலங்களின் புற்களின் தரத்தை மேம்படுத் தினால் தீவுப் பகுதிகளில் விலங்கு வேளாண் மையை விருத்தி செய்யமுடியும். இவ் நிலங்கள் பொதுவாக அரசுக் குரிய நிலமாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை (Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

மண்டைதீவு- அல்லைப்பிட்டி -பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோண கண்ணாக்காட்டு சதுப்பு நிலப்பகுதியை இயற்கை ஒதுக்கான பகுதியாக மாற்றவேண்டும். இது பறவை சரணாலயமாக வளர வாய்ப்புண்டு. மேலும் சூழல் -சுற்றுலாப் பகுதியாக விருத்தி செய்ய முடியும். இதுபோல வெள்ளைக் கடற் கரை, புங்குடுதீவு கண்ணகியம்மன் கரையோரப் பகுதிகள் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு மிகவும் உகந்தன.

தீவுப் பகுதியின் இன்றைய சூழ்நிலை பெரிய திட்டங்களை மேற்கொள்ள சில இடர்பாடுகள் இருந்தாலும், சமாதானம் ஏற்படும் பொழுது மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் பெரும் பிரச்சினைகள் எழ முடியாது. ஆகவே செய்யக்கூடிய திட்டங்களை. தாமதம் செய்யாது முன்னெடுப்போமாக. ♦

# இனிய நண்பரை இழந்துவிட்டேன் ரகுவரன் மறைவுக்கு ரஜினி இரங்கல்



ரகுவரன் மறைவுக்கு நடிகர் ரஜினிகாந்த் ஆழ்ந்த இரங்கலைத் தெரித்துள்ளார்.

"ரகுவரனின் திடீர் மரணம் என்னையும் திரையுலகையும் மிகவும் பாதித்துவிட்டது. பல படங்களில் இணைந்து நடித்துள்ளோம். அவருடன் நடிப்பது சவாலான விஷயம். மிக நல்ல மனிதரான ரகுவரன் ஆன்மீகத்திலும் அதிக நாட்டம் கொண்டிருந்தார். 'சிவாஜி' படப்பிடிப்பின் போது பல விஷயங்களைப் பகிர்ந்துகொண்டோம். பழகுவதற்கு மிக இனிமையானவர். மீண்டும் அவர் படங்களில் நடிக்கத் தொடங்கியதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் அவருடைய திடீர் மறைவால் ஓர் இனிய நண்பரை இழந்துவிட்டேன். அவருடைய பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார் ரஜினி.

ஹைதராபாத்தில் 'குசேலன்' படப்பிடிப்பில் ரஜினியுடன் இருந்த இயக்குநர் பி.வாசு, நடிகர்கள் பிரபு, விஜயகுமார், நிழல்கள் ரவி, மோகன்ராம், நடிகை நயன்தாரா உள்ளிட்டோரும் தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர். அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் படப்பிடிப்பு பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

# சினி விமர்சனம்



## (அக்கு)

தீவிரவாதி தங்கையின் காதல் போராட்ட கதை...

அஜய்-ஸ்ரீஜி காதலர்கள். இருவரும் வீட்டை விட்டு ஓடுகின்றனர். ஸ்ரீஜி அண்ணன் தீவிரவாதி. சக அடியாட்களை அனுப்பி காதல் ஜோடியை பிடித்து வருகிறான். தங்கையை அறைக்குள் அடைத்துப் போடுகிறான். காதலன் கால் ஷூவுக்குள் வெடிகுண்டை கட்டி ஓட விடுகிறான். நின்றால் குண்டு வெடித்து சாகும் வகையில் அதை அமைக்கிறான்.

உயிரைக்காப்பாற்ற அஜய் ஓடுகிறார். பொலிசுக்கு தகவல் பறக்க வெடிகுண்டு நிபுணர், டாக்டர் குழுவினருடன் ஆஜராகிறார்கள். அஜய் ஓடும் வழி நெடுக போக்குவரத்தை நிறுத்தி பின் தொடர்கின்றனர். ஓட்டத்தை நிறுத்தாமல் குண்டை எப்படி அகற்றுவது என தலையை பிய்க்கின்றனர். அவர் காப்பாற்றப்பட்டாரா என்பது கிளைமாக்ஸ்...

தமிழ் பட வரலாற்றில் புதுமையான படம். சிறு கருவை வைத்து ஹாலிவுட் தரத்தில் விறுவிறுப்பாக கதையை நகர்த்துகிறார் இயக்குநர் மாமணி. பாடல், சண்டைகளை தவிர்த்து ஒரு மணி நாற்பது நிமிட நேர படமாக எடுத்ததற்கு சபாஷ் போடலாம்.

நாயகன் அஜய் புதுமுகம் நினைப்பை உடைத்து முழுப் படத்திலும் ஓடியே மனதில் நிறைகிறார். கட்டுக் காவலில் அடைபட்டுக் கிடக்கும் ஸ்ரீஜி பிய்த்து போட்ட செல்போனை இணைத்து பொலிஸாருடன் தொடர்பு கொண்டு தன்னை மீட்கப் போராடுவது பரபரப்பு... வெடிகுண்டு நிபுணராக வரும் அனுஹாசன் வலுவான கரக்டரில் பளிச்சிடுகிறார்.

காரில் சென்றபடி காலுக்குள் இருக்கும் குண்டின் தன்மையை ஆய்வு செய்வது நேர்த்தி... கிளைமாக்சில் கைதட்டல் பெறுகிறார். தீவிரவாதியாக வரும் ரக்ஷை கொடூர வில்லன். உதவி கமிஷனராக வரும் ரியாஷ்கான், இன்ஸ்பெக்டராக வரும் ராம்கான் டாக்டராக வரும் ஜெயஸ்ரீ வலுவான பாத்திரங்களில் பலம் சேர்க்கின்றனர்.

வித்தியாசமான கதைக்கு பெரிய மைனஸ். ஃ என்ற படத்தின் தலைப்பு. வேறு நல்ல பெயர் சூட்டி இருந்ததால் திரும்பிப் பார்க்க வைத்திருக்கும் இன்னொரு பெரிய பலம் சிட்டிபாபுவின் ஒளிப்பதிவு. சுற்றிச் சுழன்று பிரமிக்க வைக்கிறது. ஸ்ரீராம் இசையும் அதிர வைக்கிறது.

# இனிவரும் அனைத்துப் படங்களிலும் திறமையை காட்டப்போகிறேன் —பாவனா



இதுவரை வந்த படங்களில் அழகு பதுமையாக வந்துமுகம் காட்டிவிட்டு சென்ற பாவனா இனிவந்தோம் போனோம் என்ற மாதிரி கேரக்டரில் நடிக்காமல் அழுத்தமான கேரக்டரில் நடிக்கப் போகிறாராம்.

பாவனா இதுபற்றி கூறும்போது "எனது நடிப்பில் மாற்றத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே இனி வருகிற அனைத்துப் படங்களிலும் எனது நடிப்புத் திறமையை எதிர்பார்க்கலாம். இதற்கான கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறேன்.

சவாலான கரக்டரில் நடித்து புகழ்பெறவேண்டும் என்பதே எனது விருப்பம்" என்றார். தற்போது "ஜெயம்கொண்டான்" என்ற படத்தில் நடித்துவரும் அவர் இந்தப் படத்தில் கூடைப் பந்து வீராங்கனையாக நடிக்கிறாராம். இதில் உண்மையான வீராங்கனை போல தெரிய வேண்டும் என்பதற்காக கூடைப்பந்து விளையாட பயிற்சி எடுத்து வருகிறாராம்.

சமீபகால படங்களில் கவர்ச்சியாக நடித்த பாவனா இனி கவர்ச்சியாக நடிப்பது இல்லை என்று முடிவு எடுத்திருக்கிறார். அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்க போகிறாராம். பாவனா தமிழில் "ஜெயம்கொண்டான்" தவிர வேறுபடங்களில் நடிக்க சம்மதிக்கவில்லை. ஆனால் தெலுங்கில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். "தயாரிப்பாளர்கள் கவர்ச்சி இல்லாத கேரக்டர்களை கொடுப்பதாக உறுதியளித்ததால் அதிக தெலுங்குப் படங்களில் நடிக்கிறேன்" என்றும் கூறினார். மலையாளத்தில் இருந்து தமிழ், தெலுங்குக்கு வந்து விட்ட நடிகைகள் மறுபடியும் மலை யாளத்தில் நடிக்க ஆர்வம் காட்டுவது இல்லை. ஆனால் பாவனா புதிதாக 3 மலையாளப் படங்களில் நடிக்க ஒத்துக்கொண்டுள்ளார்.

# பெரிய நடிகைகளை பின்தள்ளி முதல் இடத்தில் நயன்தாரா



ஐயா படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் நயன்தாரா. குறுகிய நாட்களிலேயே முன்னணி ஹீரோக்களுடன் நடித்து பிரபலமானார்.

சந்திரமுகியில் ரஜினியின் ஜோடியானார். இப்படம் அவருக்கு வாய்ப்புகளை குவித்தது. சிவாஜியில் ரஜினியுடன் ஒரு பாடலுக்கு ஆடி அசத்தினார். வல்லவனில் துணிச்சலாக முத்தக் காட்சியில் நடித்து பரபரப்பு ஏற்படுத்தினார். தெலுங்கிலும் நாகர்ஜுனா, வெங்கடேஷ் உள்ளிட்ட பெரிய ஹீரோக்கள் ஜோடியாகயுள்ளார்.

அஜித் ஜோடியாக பில்லா படத்தில் கவர்ச்சியாக வந்தார். அவரது ஸ்டைல் பேசப்பட்டது. அவருக்கு மேலும் 5 படங்கள் கைவசம் உள்ளன.

தனுஷ் ஜோடியாக நடித்த யாரடி நீ மோகினி படம் ரிலீசுக்கு தயாராக உள்ளது. விஷாலுடன் சத்யம் படத்தில் நடிக்கிறார். இப்படம் கோடை விடுமுறையில் வெளியாகிறது.

அடுத்து 'குசேலன்' படத்தில் ரஜினி ஜோடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் படப்பிடிப்பு அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஐதராபாத்தில் பிலிம் சிட்டியில் துவங்குகிறது. தற்போது அஜித் ஜோடியாக ஏகன் படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார். டான்ஸ் மாஸ்டர் ராஜுசுந்தரம் இப்படத்தை இயக்குகிறார். பில்லாவுக்கு பிறகு அஜித்தும், நயன்தாராவும் இதில் சேர்ந்து நடிக்கின்றனர். ஐங்கரன் பிலிம் இண்டர்நஷனல் இப்படத்தைத் தயாரிக்கிறது. விஜய் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கவும் நயன்தாரா ஒப்பந்தமாகி உள்ளார். பிரபுதேவா இயக்குகிறார்.

தமிழ் நடிகைகளில் அதிக படங்கள் கைவசம் வைத்துள்ளவர் நயன்தாரா என்பது குறிப்பிடத்தக்கது. திரிஷா, அசின், ஸ்ரேயா போன்ற பெரிய நடிகைகளை பின்னுக்கு தள்ளி முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

# கில்லியை போல குருவி படம் கலக்கும் —திரிஷா



விஜய், திரிஷா ஜோடியாக நடிக்கும் குருவி படப்பிடிப்பு விறுவிறுப்பாக மலேசியாவில் சமீபத்தில் இதன் பாடல் காட்சி படமாக்கப்பட்டது. உதயநிதி தயாரிக்கும் இப்படத்தை தரணி இயக்குகிறார்.

குருவி படம் பற்றி திரி ஷா கூறியதாவது,

கில்லி படம் எடுத்த குழுவினர் குருவி படத்திலும் சேர்ந்திருக்கிறோம். படப்பிடிப்பு ஜாலியாக நடக்கிறது. கில்லி படப்பிடிப்பில் இருந்த மாதிரி உணர்வில் வேலை செய்கிறோம். கில்லி மாதிரி குருவி படமும் கலக்கும்.

நல்ல கரக்டர்களில் நடித்துவிட்டேன். சிறந்த நடிகை என்ற பெயரும் வாங்கிவிட்டேன். இன்னும் சாதிக்க வேண்டும் என்ற வெறி இருக்கிறது. லேசா லேசா படம் மூலம் சினிமாவுக்கு வந்தேன்.

ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. உழைப்பும் அதிர்ஷ்டமும் இருந்ததால்தான் நிலைத்து இருக் கிறேன். இதை நிரந்தரமாக காப்பாற்றியாக வேண்டும்.

நயன்தாரா முன்னேறிக் கொண்டிருக்கிறார். அவரைப்போல் நிறைய நடிகைகள் என்னைவிட நன்றாக நடிக்கிறார்கள். அவர்கள் சினிமாவில் நிச்சயம் சாதிப்பார்கள்.

அபியும் நானும் என்ற படத்தில் தற்போது [illegible]த்துக் கொண்டிருக்கிறேன். ராதாமோகன் இயக்குகிறார். [illegible]ப்படத்தின் கதை எனக்கு ரொம்பப் பிடித்து இருந்தது. அ[illegible]டு ராதாமோகன் 'மொழி' ஹிட் படத்தைக் கொடுத்தவர். ஜோதிகாவுக்கு அந்த ஒரே படத்தில் கிடைத்த பெயர் போதும். அபியும் நானும் படம் மூலம் எனக்கும் நல்ல பெயர் கிடைக்கும் இவ்வாறு திரிஷா கூறினார்.

# மளிகை கடைக்காரராக வடிவேல்!



விஜய்-பிரியங்கா சோப்ரா நடித்த 'தமிழன்' படத்தை டைரக்ட் செய்தவர் ஏ.மஜீத். இவர் இப்போது அருண் விஜய்யை வைத்து, 'துணிச்சல்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதையடுத்து மஜீத் கதை-திரைக்கதை-வசனம் எழுதி டைரக்ட் செய்யும் புதிய படம் 'கி.மு.'

இந்தப் படத்தில் புதுமுகம் ஹசன் கதாநாயகனாக நடிக்கிறார். புதுமுகம் சாரிகா அறிமுகம் ஆகிறார். வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சிகள் படத்தில் சிறப்பு அம்சங்களாக அமைந்துள்ளன.

மளிகைக் கடை வைத்திருக்கும் வடிவேல், மொத்த வியாபாரக் கடைகளுக்கு சென்று, 100 கிலோ மிளகாய் என்ன விலை? 100 மூட்டை அரிசி என்ன விலை? 50 மூட்டை பருப்பு என்ன விலை? என்றெல்லாம் விலையை விசாரித்து, கடைசியில் ஒரு கிலோ அரிசி கொடுங்க என்று கேட்டு வாங்கி வந்து மளிகைக் கடை நடத்துபவராக நடித்திருக்கிறார்.

ஹசன், சாரிகா, வடிவேலுவுடன் சரண்ராஜ், வையாபுரி, சிங்கமுத்து, சங்கீதா பாலன் ஆகியோரும் நடிக்கிறார்கள். டைரக்டர் மஜீத் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார். யாக்கோ பிலிம்ஸ் சார்பில் யாகூப் தீன் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

# விமர்சனம் பற்றி அஞ்சமாட்டேன் —ஸ்ரேயா



தமிழ்- தெலுங்கு திரையுலகை கலக்கி வருபவர் ஸ்ரேயா. சிவாஜி படத்தில் நடித்ததற்கு பிறகு இவருக்கு பட வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளன.

இவற்றில் நல்ல கதைகளை தேர்வுசெய்து நடித்து வருகிறார். ஐதராபாத்தில் நடந்த தெலுங்கு படப்பிடிப்பின்போது ஸ்ரேயா அளித்த பேட்டி,

சிவாஜி படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் நடித்ததை மிகவும் பெரு மையாக நினைக்கிறேன். இப்படத்தை நடித்த பிறகு உலகின் பல்வேறு நாடு களில் இருந்த ரசிகர்கள் வாழ்ந்து தெரிவித்தனர்.

குறிப்பாக ஜப்பான், கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து ரஜினி ரசிகர்கள் எனக்கு பாராட்டுத் தெரிவித்தனர். இது எனக்கு மிகவும் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் தமிழில் சீனியர் நடிகை ஒருவர் என் நடிப்பை விமர்சனம் செய்திருந்தார். நான் முகத்தில் உணர்ச்சியைக் காட்டி நடிக்கவில்லை என்றும் மிகவும் கவர்ச்சியாக நடித்திருப்பதாகவும் விமர்சனம் செய்தார்.

இதேபோல சினிமாத் துறையில் உள்ள பலர் எனக்கு நன்றாக நடிக்கத் தெரியவில்லை என்று விமர்சனம் செய்துள்ளனர். என்னைப் பொறுத்த வரையில் விமர்சனம் பற்றி' கவலைப்படமாட்டேன் .அதை கண்டு ஓடி ஒளிந்து கொள்ளவும் மாட்டேன். நல்ல விமர்சனம் என்றால் எனது குறைகளைக் கண்டறிந்து அதை சரிப்படுத்த முயற்சி செய்வேன்.

கெட்ட விமர்சனம் என்றால் மறந்து விடுவேன். அதை நினைத்து கவலைப்படுவதால் எந்தப் பிரஜோசனமும் இல்லை இவ்வாறு ஸ்ரேயா கூறினார்.

# நியூசிலாந்தின் அபார பந்து வீச்சில் இங்கிலாந்து அணியின் விக்கெட் சரிவு

## சதமடித்துக் காப்பாற்றினார் பீற்றர்சன்

(நேபியார்)

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பீற்றர்சனின் சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது. நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து



அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இத்தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் ஒவ்வொரு அணியும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று தொடரில் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

தொடரின் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று நேபியரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில்துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் வோகன் 2, குக் 2 ஓட்டங்களுடனும் அன்ரு ஸ்ரோஸ் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழக்க 4 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.


எனினும் தொடர்ந்து பீற்றர்சனும் பெல்லும் இணைந்து நிதானமாக ஆடியபோதும் பெல் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 36 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து இங்கிலாந்து அணி திணறியது.

5-வது விக்கெட்டுக்கு பீற்றர்சனுடன் ஜோடி சேர்ந்த கொலிங்வூட் சிறப்பாக ஆட ஓரளவு இங்கிலாந்து அணி மீண்டது.

எனினும் கொலிங்வூட் 30 ஓட்டங்களுடனும் தொடர்ந்து வந்த அம்புறுஸ் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 147 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது . அடுத்து 7-வது விக்கெட்டுக்காக பீற்றர்சனுடன் ஜோடி சேர்ந்து பிரோட் சிறப்பாக ஆடினார்.

மறுமுனையில் பீற்றர்சன் தனது டெஸ்ட் சதத்தைக் கடந்தார். எனினும் 129 ஓட்டங்களை எடுத்த நிலையில் பீற்றர்சன் ஆட்டமிழக்க இறுதியில் நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது.

களத்தில் பிரோட் 42 ஓட்டங்களுடனும்



சையிட் பொத்தம் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் மார்டீன், எலியோற் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (5)

## சென்னை வந்தது தென்னாபிரிக்கா

(சென்னை)

தென் ஆபிரிக்க கிரிக்கெற் அணி நேற்றுக்காலை சென்னை வந்தது. இந்தியா-தென்னாபிரிக்கா இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெற் போட்டி மார்ச் 26 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறுகிறது. இதை ஒட்டி சென்னை வந்த தென்னாபிரிக்க வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்புடன் தென்னாபிரிக்க அணியினர் அழைத்து வரப்பட்டனர். இந்திய வீரர்களில் சேவாக் மற்றும் பந்துவீச்சு பயிற்சியாளர் வெங்கடேஷ் பிரசாத் நேற்று முன்தினம் சென்னை வந்தனர். மற்றவர்கள் நேற்று வந்தடைந்தனர். தென் ஆபிரிக்க அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## மரியா ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி

(நியூயோர்க்)

பசுபிக் லைப் ஓபன் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீராங்கனை மரியா ஷரபோவா அரையிறுதியில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானாவோவுடன் அரையிறுதியில் அவர் மோதினார். இதில் அவர் 6:3, 5:7, 6:2 என்னும் செட் கணக்கில் தோல்வி அடைந்துவெளியேறினார். இந்த ஆண்டு மரியா ஷரபோவா தொடர்ந்து 18 ஆட்டங்களில் வெற்றி பெற்று வந்துள்ள நிலையில் தற்போது முதல் முறையாக தோல்வி அடைந்துள்ளார்.

மற்றொரு அரையிறுதியில் செர்பிய வீராங்கனைகள் அனா இவானோவிக் மற்றும் ஜெலினா ஜோன்கோவிக் மோதுகின்றனர். (5)

## நீச்சலில் புதிய சாதனை

(ஆம்ஸ்டர்டம்)

நீச்சல் போட்டியில் பிரான்ஸ் வீரர் ஏலியன் பெர்னார்ட் புதிய சாதனை படைத்துள்ளார்.

நெதர்லாந்து நாட்டில் நடைபெறும் ஐரோப்பிய நீச்சல் போட்டிகளில் 100 மீற்றர் பிரிஸ்டைல் பிரிவில் அவர் 47.60 விநாடிகளில் கடந்து புதிய சாதனை படைத்தார்.

இதற்கு முன்னர் நெதர்லாந்து வீரர் கூகன் பாண்ட் 47.84 விநாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது. ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் பிரான்ஸ் வீரர் புதிய சாதனை படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (5)

# ஐ.பி.எல் 'இருபது - 20' போட்டிகளால் பாகிஸ்தான்-இலங்கைத் தொடர் பாதிப்பு

(கராச்சி)

ஐ.பி.எல் அமைப்பின் கிரிக்கெட் தொடரால் பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

இந்திய கிரிக்கெற் சபை சார்பில் உருவாக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு கோடிகளை கொட்டி முன்னணி வீரர்கள் பலரை வளைத்துப்போட்டது.

வீரர்களும் தங்கள் தேசிய அணிகளுக்காக விளையாடுவதை விட, ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி அதிகமாக சம்பாதிக்கலாம் என்பதால் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் பல நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல் நடத்தும் தொடர்களால் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் பாதிக்கப்படும் என்று புகார் எழுந்தது. இதையடுத்து ஐ.பி.எல் போட்டிகளால் சர்வதேச போட்டிகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்று இந்திய கிரிக்கெற் சபை உறுதியளித்தது.

ஆனால் தற்போது பாகிஸ்தான்-இலங்கை அணிகள் பங்கேற்கும் தொடர், ஐ.பி.எல். போட்டிகளால் பாதிக்கப்படும் என்ற சூழல் உருவாகியுள்ளது.

பெனாசீர் படுகொலையை அடுத்து, பாகிஸ்தானில் திட்டமிடப்பட்டிருந்த தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய அணி மறுத்து விட்டது.

எனவே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கை அணியுடன் ஒருநாள் போட்டித் தொடர் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கு இலங்கை கிரிக்கெட் சபையும் சம்மதித்தது. இது குறித்து சபையின் தலைவர் ரணதுங்க கூறுகையில், 'இந்தியாவும் பாகிஸ்தானும் இக்கட்டான நேரங்களில் சகோதரர்களைப் போன்று எங்களுக்கு உதவி செய்பவர்கள். எனவே பாகிஸ்தான் கிரிக்கெற் சபை கேட்கும் நேரத்தில், எங்கள் அணியை அனுப்ப தயாராக இருக்கின்றோம்' என்றார்.

இலங்கை அணியின் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணம் ஏப்ரல் 15ஆம் திகதியுடன் முடிபடைகிறது.

இது முடிபடைந்ததும் பாகிஸ்தான் தொடரில் இலங்கை அணி விளையாடுவதாக திட்டமிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 23 தொடக்கம் மே 5வரை இத்தொடர் நடத்தப்படும் என தெரியவருகிறது. இந்தத் திகதிகள் என்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஐ.பி.எல்.நடத்தும் இருபது -20 போட்டித் தொடர் ஏப்ரல் 18ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளைச் சேர்ந்த சங்கக்கார, முரளிதரன். ஜெயசூர்யா, ஜெயவர்தன, டில்சான், பெர்னாண்டோ, சோயப் அக்தர், யூனிஸ்கான், அப்ரிடி, சொயப் மாலிக், சல்மான்பட், முகமது ஆசிப், உமர்குல், மிஸ்பா உல் ஹக், அக்மல் போன்ற முன்னணி வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு தொடர்களும் சமகாலத்தில் நடந்தால் இவ் வீரர்கள் இலங்கை -பாகிஸ்தான் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்படும். இவர்கள் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கவில்லை என்றால் அவர்களை கோடிக்கணக்கான தொகைசெலவழித்து வாங்கிய ஐ.பி.எல் அணிகள் பாதிக்கப்படும்.

இத்தகைய பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதில் ஐ.பி.எல் உறுதியாகவுள்ளது. (5)

# அணித்தலைவராக தோனியை சிபார்சு செய்தார் டெண்டுல்கர்

## இரகசியத்தை அம்பலப்படுத்தினார் பவார்



(புதுடில்லி)

அணித்தலைவர் பதவிக்கு தோனியின் பெயரை சச்சின்தான் சிபார்சு செய்ததாக பி.சி.சி.ஐ தலைவர் சரத் பவார் அதிரடியாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2007-ல் நடந்த இங்கிலாந்து தொடரின்போது அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக ராவிட் திடீரென அறிவித்தார்.

உடனே இந்திய அணியில் புயல் வீசியது. அடுத்தஅணித்தலைவர் யார்? என்ற கேள்வி எழுந்தது. மூத்தவீரர் என்ற அடிப்படையில் சச்சினுக்கு வாய்ப்பு அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இவர் மறுக்கும் பட்சத்தில் யுவராஜ் வாய்ப்புப் பெறலாம் என்று கூறப்பட்டது. ஆனால் இருபது-20 உலகக் கோப்பை மற்றும் ஒரு நாள் போட்டிக்கான அணித்தலைவராக தோனி தேர்வு செய்யப்பட்டார். டெஸ்ட்போட்டிக்கு கும்ளே அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

### தோனிக்குப் பதிலடி

இதில் தோனிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது பற்றி சர்ச்சை ஏற்பட்டது. அனுபவ வீரரான யுவராஜை புறக்கணித்து விட்டதாக விமர்சிக்கப்பட்டது.

தேர்வாளர்களின் இந்த அதிரடி முடிபுக்கு சச்சின்தான் காரணம் என இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சரத்பவார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இதன் மூலம் மூத்தவீரர்களை குறைத்துப் பேசிய தோனிக்கு சரியான பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை தலைவர் சரத் பவார் அளித்த பேட்டி;

தனது துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தும் நோக்கில் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக இங்கிலாந்து தொடரின் போது ராவிட் திடீரென தெரிவித்தார்.

அப்போது தேர்வாளர்களில் சிலர் சச்சினை மீண்டும் அணித்தலைவராக நியமிக்க விரும்பினர். அவரிடம் கேட்கப்பட்டபோது 'ப்ளீஸ் - வேண்டாம்' என்றார்.



அப்படியானால் யாரை நியமிக்கலாம் எனக் கேட்டேன் அதற்கு சச்சின், தோனிக்கு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்களேன். சக வீரர்களுடன் நல்லுறவு வைத்துள்ளார் என சிபார்சு செய்தார்.

இந்த விடயத்தில் தலையிட விரும்பாத நான் சச்சினின் பரிந்துரையை தேர்வாளர்களிடம் சொல்வதாக உறுதியளித்தேன். பின்னர் ஒருநாள் போட்டிக்கான அணித்தலைவராக தோனி தேர்வு செய்யப்பட்டார் என்றார். (5)

கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் மற்று
ஆங்கே
எடுப்பதும் எல்லாம் மழை.
-திருக்குறள்

வலம்புரி

## பெய்துவரும் கடும் மழை விவசாய இழப்பிற்கு நட்டஈடு தேவை

கடந்த பல நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் விவசாயிகள் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர்.

நெல் அறுவடைக் காலத்தில் ஆரம்பித்த மழையினால் விளைந்தும் வீடு வந்துசேராத துன்பம் விவசாயிகளை வாட்டுவதாக உள்ளது.

அதேநேரம் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தலையில் கைவைத்து அழாக்குறையாக உள்ளனர்.

குறிப்பாகத் தீவகப் பகுதியின் புகையிலைச் செய்கையின் அறுவடைக் காலம் இதுவாகும். புகையிலையை வெட்டி அவற்றைப் பதப்படுத்தும் காலத்தில் மழை பெய்வது விரும்பத்தக்கதல்ல. புகையிலை வெட்டுக் காலத்தில் மழை பெய்தால் அது புகையிலையின் திரத்தைக் குறைத்து நட்டத்தை ஏற்படுத்தும் என்பது அனுபவ உண்மை.

இந்நிலையில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால், புகையிலைகள் தூய்ந்துபோய் ஒட்டுமொத்த நட்டத்தை ஏற்படுத்தும் அபாயத்திற்கு வந்துள்ளது.

இந்தத் துயரத்திலிருந்து விவசாயிகள் எவ்வாறு மீளப்போகிறார்கள். அவர்களின் முதல் நட்டத்தை ஈடுசெய்ய யார் நிவாரணமளிக்கப் போகிறார்கள் என்ற பல்வகை வினாக்களுக்கு அப்பால் தொடரும் மழை விவசாயக் குடும்பங்களை பொருளாதார ரீதியில் முடக்கி அவர்களை ஏழைகளாக்கப்போகின்றதென்பது வேதனையை இரட்டிப்பாக்கவல்லதாகும்.

யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாமைக்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

அதில் குறிப்பாக முதலீடு செய்வதற்கு போதிய நிதி வசதி இன்மை. உள்ளீடுகளின் உயர்ந்த விலையும் உரிய காலத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத தன்மையும்.

குறைந்த சந்தைப்படுத்தும் வசதிகள் எனப் பல்வகை இடைஞ்சல்களின் மத்தியிலேயே விவசாயத் தொழில் முன்னகர்த்தப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு சிக்கல்கள், இடையூறுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் விவசாயத்தை இயற்கையும் ஒருகை பார்க்குமாயின் விவசாயிகளின் நிலை என்னவாகும் என்பதை மனித மொழிகளில் கூறிவிட முடியாது.

இத்தகைய இயற்கை அழிவுகள் விவசாயத் தொழிலுக்கு மனமுவந்து வருவோரையும் விலக்கி விடும்.

யாழ்.குடாநாட்டின் விவசாயச்செய்கை பற்றிய ஓர் வரலாற்றை ஆராய்வோமாயின், விவசாயத் தொழிலிலிருந்து விலகுவோரினதும் இடமாற்றம் பெறுவோரினதும் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து தற்போது மிகக் குறைந்த அளவினரே விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற உண்மையை கண்டறிய முடியும்.

இந்த உண்மைக்குள் இருக்கக் கூடிய சிறு பகுதியினரையும் வெறுப்படைய வைக்கும் அளவிற்கு தற்போது பெய்துவரும் மழை வேகமெடுத்து வருகிறது.

பருவகாலத்திற்கு அப்பாற்பட்டதாகப் பெய்து வரும் மழையினால் விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய நட்டங்களை ஓரளவேனும் ஈடுசெய்யக் கூடியதான நிவாரணத் திட்டங்கள் அமுல் படுத்தப்படுவது விவசாயிகளை பாதுகாப்பதற்கான கட்டாய தேவையாகும்.

# இரண்டாம் காலாண்டில் பணவீக்கம் வீழ்ச்சியடையும்

## மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாடுகளில் ஏற்பட்ட உணவு விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பும் உள் நாட்டு பண நிரம்பலில் காணப்பட்ட தடங்கலுமே எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட பண வீக்கம் அதிகரித்துச் செல்வதற்கு காரணம் என இலங்கை மத்திய வங்கி வெளியீட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பணவீக்கம் இவ்வாண்டு ஜனவரியில் காணப்பட்ட 20.8 வீதத்துடன் ஒப் பிடுமிடத்து பெப்ரவரியில் 21.6 வீதமாக அதிகரித்ததாகவும் எனினும் பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளின் தாக்கம் படிப்படியாகக் குறைவதனால் இவ் வாண்டின் இரண்டாம் காலாண்டளவில் பணவீக்கம் வீழ்ச்சியடையுமென எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளில் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பானது மசகு எண்ணெயின் விலை படிப்படியாக உயர்வடைந்தமையினால் மேலும் தீவிரமடைந்து குறிப்பாக 2007ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து பல நாடுகளின் பணவீக்கத்தை அதிகரித்துச் சென்றதாகவும் ,

இலங்கையிலும் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் கடந்த ஜனவரியில் காணப்பட்ட 20.8 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து பெப்ரவரியில் 21.6 சதவீதத்தினை அடைந்த அதேவேளை ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் ஜனவரியில் 16.4 சதவீதத்திலிருந்து பெப்ரவரியில் 17.0 சதவீதத்திற்கு உயர்வடைந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

, சர்வதேச நாடுகளில் உணவு விலைகளினது தொடர்ச்சியான உயர்வும் அதே போன்று உள் நாட்டு நிரம்பலில் காணப் பட்ட தடங்கல்களும் பணவீக்கத்தினை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட உயர்வாக அதிகரிக்கச் செய்வதற்கு காரணமாகின. எனினும் இத்தகைய அபிவிருத்திகளின் தாக்கம் படிப்படியாக குறைந்து ஆண்டின் இரண்டாம் காலாண்டளவில்பண வீக்கம் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

## மாவின் விலை மீண்டும் அதிகரிக்கும்? அனுமதி கோரி 'பிறிமா' கடிதம்

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. உலக சந்தையில் 'திரிங்கு' கொட்டையின் விலை அதி கரித்துள்ளமையினால் உள் நாட்டில் கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலையை கிலோவுக்கு 10ரூபாவினால் அதிகரிப் பதற்கு அனு மதி வழங்குமாறு பிறிமா நிறுவனம் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத் துள்ளது.

பிறிமா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியைக் கோரவேண்டிய அவசியம் இல்லை என்று அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிலோவுக்கு 13ரூபாவினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்த துண்டுவதே கட்டண அதிகரிப்பின் நோக்கம்

### பொது முகாமையாளர் புள்ளேபெரும

மக்களை மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்தத்தூண்டுவதே இம்முறை மின்சாரக்கட்டணம் அதிகரிப்பின் முக்கிய நோக்கம் என்று இலங்கை மின்சாரசபை தெரிவிக்கின்றது.

இலங்கையில் பாரியளவில் மின்சாரம் விரையமாக்கப்படுவது குறித்து இனங்காணப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின்பொது முகாமையாளர்டி ஆர் புள்ளே பெரும குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவது புதிய கட்டணத் திருத்தத்தின் மற்றுமொரு நோக்கமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார அலகுகளின் விலைகளை நோக்கும் போது அவற்றின் எல்லைகளை மக்கள் அறிந்து கொள்ள முடியும் என்றும், சாதாரண ஒருவர் மின்சார அலகு ஒன்றை 25 ரூபாவுக்கு கொள்வனவு செய்வது என்பது இயலாத காரியம் என்றும் மின்சார சபையின் பொது முகாமையா ளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவைப்பாட்டின் அடிப்படையில் அலகுகளின் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள அதே வேளை வழமை போன்று 90 அலகுகள் வரையான மின்சாரப் பாவனைக்கான விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

90 அலகுகளை விட அதிகமாக எரிபொருட் செலவு 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை அதிகரிப்பதாகவும் அதற்கேற்ற வகையில் ஏனைய அலகுகளின் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். தேவைய[illegible]ன மின்சாரம் கட்டண அளவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த வருடத்திலும் உரிய முழுமையான கட்டண [illegible]றைமையை மேற்கொள்ளவில்லை [illegible] ஆர். புல்லே பெரும மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## ஜெயந்தி தினவிழா

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியால் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணி[illegible] சமிதி மண்டபத்தில். குரு தேவர் [illegible] பரமஹம்சரின் நேரடி சீ[illegible] சுவாமி யோகானந்த[illegible] வுகள் நடாத்தப்படவுள்ளது.

நிகழ்வில். விசேட அ[illegible] உரை, [illegible] ஆராதனை பிரசாதம் வ[illegible]ல் ஆகியன இடம்பெறும். (ஓ)

# உயிர்த்த இயேசு தரும் அமைதி உள்ளங்கள் எங்கும் தங்குக!



உயிர்ப்புப் பெருவிழா நல் வாழ்த்துக்கள்!

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இன்று கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பை பெருவிழாவாக மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். உயிர்ப்பு விழா பாஸ்காவிழா என்றும் அழைக்கப்படுகிறது. பாஸ்கா என்றால் கடந்து செல்லல்-மீட்பு - விடுதலை என்று பொருள் படுகிறது. அடிமை நிலையில் இருந்து உரிமை வாழ்வுக்கும் பாவக்கட்டுக்கள் , உலகியல் போக்கு களில் நின்று அருள் நிலைக்கும் எம்மை கடத்தி மீட்டு விடு தலை வெற்றியை தருவதே பாஸ்கா பலியின் மறைப்பொருளாகும்.

### தவக்காலப் பொழிவு

எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேவரை செங்கடலூடாக நகர்த்தி விடுதலையளித்து புதிய நாட்டை கொடுத்தது கிறிஸ்துவுக்கு முந்திய பாஸ்காவாகும். பாவ அடிமை இருளில் இருந்து அனைத்துலகோரையும் மீட்க தனது உயிரையே இரத்தம் சிந்தி புதிய செம்மதிபோல சிலுவையில் பலியாகி புதுவாழ்வுக்குள் எம்மை இட்டுச்செல்ல தம் உயிர்ப்பின் வழியாக விடுதலை வெற்றியைப் பெற்றுத் தந்தது இயேசுவின் புதிய பாஸ்காவாகும்.

### உயிர்ப்பு ஞாயிறு

காவியநாயகனை கல்லறைக்குள் விதையாக புதைத்தனர். மண்ணிலே விழுந்த விதை முளை கொண்டெழவும் கருப்பையில் விழுந்த அணு புத்துயிராய் பிரசவிக்கவும் அருட்பொழிவு செய்யும் ஆண்டவனுக்கு கல்லறையா? அதற்கொரு காவலா? உயிர்கொடுக்கும் இறை வனின் உடலது மண்ணுக்குள் அடங்குமா? மர ணத்தையே மரணிக்கச் செய்து மாவீரனாக இயேசு உயிர்த்தெழுந்தார். தாம் வாழ்ந்த காலத்தில் கூறிய தம் உயிர்ப்பு பற்றிய முன்னறிவிப்பு இறையரசுப் போதனைகளைமெய்ப்பித்துவிட்டது. அவரது உயிர்ப்பு உயிருள்ள திருமறை கிறிஸ் தவம் என்பதற்கும் உயிர்ப்பு சான்றானது. அநீதியை வென்று நீதிக்கு உயிரூட்டி அமைதியை சமாதானத்தை நிலை நிறுத்தியது இயேசுவின் உயிர்ப்பு. அமைதிக்காக அனைவரும் ஏங்கிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் அமைதியின் அரசரான இயேசுவின் உயிர்ப்பு சமாதானத்தையும், அமைதியையும் வழங்க வல்லது என நம்புவோம்.

எஸ்.யேசுதாஸ்

# மன்னாரில் நேற்றுக் கடும்...

## இழப்பை ஏற்படுத்தி முறியடித்தோம்...

படையினரால் மிகச் செறிவான மிக அதிகளவில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு எதிராக விடுதலைப்புலிகள் செறிவான எறிகணைத் தாக்குதல்களுடன் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.

நேற்று மாலை 5 மணிவரை நடத்தப்பட்ட தாக்குதலில் படையினரின் முன்னகர்வு விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் படையினர் 55 ற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். 120ற்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தபடையினர் பின்தளங்களிலிருந்து ஊர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகள் மூலம் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதனால் மன்னார், வவுனியாசாலைப் போக்கு வரத்துப் படையினரால் தடுக்கப்பட்டது.

கடும் சேதங்களுடன் படையினர் பின்வாங்கினர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## ஒரு பகுதியைக் கைப்பற்றி விட்டோம்...

தினர் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்துள் ளனர்.

இந்த மோதல்களில் 15 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என அவர் கூறினார். மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல்களின்போது 5 விடுதலைப்புலிகளின் சடலங்களைக் கண்டுபிடித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார மேலும் தெரிவித்தார்.

மாந்தை மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் காயமடைந்த 15 இராணுவத்தினர் மன்னார் பொது வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருப்பதாக பிராந்தியச் செய்திகள் கூறுகின்றன.

காயமடைந்த இராணுவத்தினர்களை அனுமதிப்பதற்கென வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## கந்தரோடை...

பட்டுள்ளது.


இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திய மல்லாகம் நீதிவான் பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

# பாக். பிரதமராகிறார் யூசூப்ரசா கிலானி

பாகிஸ்தான் பிரதமர் பதவிக்கு செய்யது யூசூப்ரசா கிலானி என்பவரைப் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிவித்துள்ளது. பெனசீர் கொல்லப்பட்டதும் நடந்த தேர்தலில் அவரது கணவர் சர்தாரி மற்றும் மகன் தலைமையில் இயங்கி வரும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் நவாஷ் செரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் வெற்றிபெற்றுப் பெரும்பான்மையிடங்களைப் பிடித்தது.

இதனையடுத்து இரு கட்சிகளும் இணைந்து பிரதமர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் என முடிபு செய்யப்பட்டது. இதற்கிடையில் பெனாசீரின் கட்சிக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக நடந்த கட்சிக் கூட்டத்தில் பிரதமர் பதவிக்கு செய்யது யூசூப்ரசா கிலானி என்பவரைஅறிவிக்க ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இவர் கட்சியின் துணைத் தலைவர் ஆவார்.



மேலும் ஆறு ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர். கடந்த 1988 இல் நடந்த தேர்தலில் நவாஷ் செரீப்பைத் தோற்கடித்தவர் ஆவார். இன்னும் ஓரிரு நாளில் இவர் பிரதமர் பதவியை ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## இந்த...

கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி கொள்ள முடியும் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறான நிலையிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து இந்த வருட இறுதியில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி அதில் தமது பலத்தை நிரூபிக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## மாகாண...

போட்டியிடுவார்கள். இதேவேளை புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடவருமாறு கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கேட்டுள்ளார்.

இதேவேளை அரசின் கூட்டமைப்பு வேட்பாளர் பெயர்ப் பட்டியல்களைத் தயாரிப்பதற்கு அமைச்சர்களான சுசில் பிரேமஜெயந்த, நிமால் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் சபை ஒன்றினை அமைத்து செயற்படுகின்றனர். (ந-5)

# நாயாறு கடலில் அதிவேகப் பீரங்கிப் படகு...

கொக்குலாய் நீரேரிக்கும் நாயாறுப் பகுதிக்கும் இடையில் ரோந்தில் ஈடுபட்டிருந்த அதிவேகப் பீரங்கிப் படகே நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வெடித்துச் சிதறியதாகக் கடற்படைப் பேச்சாளர் வி.கே.பி.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால் தாங்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்திருக்கும் விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் 3 கரும்புலிகள் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க இதனை நிராகரித்ததோடு அதிவேகப் படகு வெடித்துச் சிதறியபோது கடலில் எந்தவிதமான மோதலும் இடம்பெறவில்லை என்றும் அச் சமயம் கடலில் கடற்புலிகளின் படகுகள் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடற்கண்ணிவெடி அல்லது கடலுக்கு அடியிலிருந்து இயக்கப்படும் ஆயுதம் ஒன்றின் மூலமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பும் இவ்வாறு முரணான தகவல்களைத் தெரிவித்துள்ளதால் அதிவேகப் பீரங்கிப் படகு எப்படி வெடித்துச் சிதறியது என்பது இதுவரை மர்மமாகவேயுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது;

முல்லைத்தீவின் கடற்பரப்பைக் கண்காணிக்கும் நோக்குடன் கொக்குலாய் நீரேரிப் பகுதியில் இரண்டு அதிவேகப் பீரங்கிப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தபோது நேற்று அதிகாலை 2.30 மணியளவில் முதலாவதாகச் சென்ற படகு பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியிருக்கின்றது.

அப் பகுதிக் கடலில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் கடற்படைக்குரிய கட்டளை அதிகாரி உட்பட 16 பேர் வெடித்துச் சிதறிய படகில் இருந்துள்ளனர். வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் படகு மூழ்கியது.

அந்தப் படகிலிருந்த கட்டளை அதிகாரி உட்பட 6 பேர் 2-வதாகச் சென்ற அதிவேகப் படகில் இருந்த கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர். கடலில் சென்று கொண்டிருந்தபோது திடீரென பாரிய சத்தம் கேட்டதாகவும் அந்தப் பகுதியில் வந்து கொண்டிருந்த மற்றொரு படகில் ஏறித் தப்பினோம் என்றும் காப்பாற்றப்பட்ட கடற்படை வீரர் ஒருவர் கூறியதாகக் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் கடற்படைக்கு படகு கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள சிலோன் டொக்கியாட் லிமிட்டெட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பி-438 என்ற பெயருடைய அதிவேகப் டோராப் படகு இந்தச் சம்பவத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்துக் கிழக்குக் கடற்படைத் தலைமையகத்திலிருந்து சென்ற கடற்படையினர் அங்கு விசேட தேடுதல்களை நடத்தினர். காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் கடற்படையினர் 10 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது.

எனினும் கடற்படையினர் அவர்களைக் காணாமல் போயிருப்பதாகவே அறிவித்துள்ளனர். அத்துடன் கடற்புலிகளால் உருவாக்கப்பட்ட புதிய கடலடித் தாக்குதல் ஆயுதம் ஒன்றால் கடற்படையின் அதிவேகப் படகு மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என்று கடற்படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் தெரிவித்திருப்பதாவது; நாயாறுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2 மணிக்கு ஆரம்பமான இந்த மோதல் சுமார் 45 நிமிடங்கள் வரை நீடித்தது.

2.10 மணிக்குக் கடற்படை டோராப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த 14 கடற்படையினர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் 3 கடற்கரும்புலிகள் உயிரிழந்தனர். லெப்.கேணல் அன்புமாறன்; மேஜர் நிரஞ்சினி; மேஜர் கனிநிலா ஆகிய கடற்கரும்புலிகளே உயிரிழந்தவர்களாவர்.

இதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் 5 கடற்படையினர் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## புலிகள்...

பிரச்சினையில் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தத் திறந்த மனதோடு உள்ளோம்.

இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் 95 சதவீத மக்கள் விரும்புகின்றனர். கிழக்கு மாகாணத் தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது. இதன் மூலம் அவர்கள் சுய ஆட்சி பெற்ற மாநிலமாக செயற்படவுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்புக் கொடுத்து வருகின்றது என்றார். (ந-5)

## ஐ.தே.கவில்...

சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ எந்த வகையிலும் அதிகாரப் பகிர்வு வழங்க முடியாது.

அதற்கான உரிமையில்லை என்றாலும் அரசு அம்முயற்சியை மேற்கொள்ளும் பட்சத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க அண்மையில் எச்சரிக்கை செய்திருந்தார்.

இதனைக் கவனத்தில் கொண்டு அரசை சக்தியுள்ளதாக தக்க வைத்துக் கொள்ளும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மேலும் பல உறுப்பினர்களது ஆதரவைப் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகத் தெரியவருகின்றது.

இதன்பொருட்டு ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பான பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது. (ந-5)


நினைவஞ்சலி

ஆண்டு இரண்டு | ஆண்டு ஒன்று



தோற்றம் 01 11 1928 | மறைவு 24 01 2006



தோற்றம் 12 05 1942 | மறைவு 04 04 2007

அமரர்
கந்தையா கனகரத்தினம்
திதி:- ஏகாதசி
(யாழ்.குணரத்தினம் ஸ்ரோஸ், ஸ்ரீ முருகன் மில் வட்டுக்கோட்டை)

அமரர்
செல்லம்மா கனகரத்தினம்
(குப்பிளான்)
திதி:- துதியை
(23.03.2008)

பத்து மாதம் எமைச் சுமந்து
பத்திரமாய் எமை வளர்த்து
உலகிற்கு எமைத் தந்த
உயர் தெய்வம் அன்னைதானே?
உதிரத்தைப் பாலாக்கி
உணவாக எமக்களித்து
கண்முன்னே உலவி வந்த
கடவுள் தானே எம் அன்னை

துன்பங்கள் அவளை வந்து
துளைத்தெடுத்த போதெல்லாம்
துவளாமல் எமை வளர்த்த
எம் அன்னை தெய்வம் தானே?
வண் தெய்வம் அம்மா என்றால்
வயிரிட்டு எமை வளர்த்து
பெருமையோடு காத்து வந்த
ஆண் தெய்வம் அப்பா தானே?

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
U.K., கனடா, சுவிஸ்

(C-925)



மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு

அரச, தனியார் ஊழியர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1.8GHz Intel Pentium Dual Core | (3 Years) | AsRock Board (Conroe-1333) | (2 Years) |
| 1GB DDR-II Kingston Ram | (3 Years) | 80GB SATA HDD (Maxtor) | (3 Years) |
| 15" View Sonic Monitor | (3 Years) | ATX Cabinet (MS 06/05) | (1 Year) |
| SONY DVD Writer | (1 Year) | Optical Mouse | |
| PS/2 Key Board | | | |

44,400/=

பாடசாலை மாணவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1.6 GHz Intel Celeron Dual core | (3 Years) | AsRock Board (Conroe-1333) | (2 Years) |
| 1GB DDR-II Kingston Ram | (3 Years) | 80GB SATA HDD (Maxtor) | (3 Years) |
| 15" View Sonic Monitor | (3 Years) | ATX Cabinet (MS 06/05) | (1 Year) |
| PS/2 Key Board | | Optical Mouse | |

36,700/=

கணினி விற்பன்னர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1.8 GHz Intel Pentium Dual Core | (3 Years) | ASUS Board (P5GC-MX-1333) | (3 Years) |
| 1GB DDR-II Kingston Ram | (3 Years) | 160GB SATA HDD (Samsung) | |
| 15" View Sonic Monitor | (3 Years) | ATX Cabinet (MS 01/02/03/04) | (1 Year) |
| SONY DVD Writer | (1 Year) | UPS Power tree | (1 Year) |
| PS/2 Key Board | | Optical Mouse | |

53,100/=

How to protect yourself against Fraud?

நீங்கள் புதிதாக கணினியை வாங்கும்போது கவனமாயிருங்கள்!பின்வரும் வழிகளில் ஏதாவது ஒன்றை பின்பற்றி புரோசசர் அளவு Brand மற்றும் RAM இனது அளவுகள் அனைத்தினையும் கண்டறிந்து கொள்ளுங்கள்

1) கணினியின் மைகொம்யூட்டரில் வலது கிளிக் செய்து பெறும் மெனுவில் Properties என்பதை கிளிக்செய்தால் பெறும் விண்டோவில் உங்களின் கணினியின் விபரங்கள் காணப்படும்
2) Start பட்டனை கிளிக்செய்து Run இல் dxdiag என ரைப்செய்து Ok செய்யுங்கள் முழுவிபரங்களும் வரும்
3) Strat-> Run-> cmd சென்று systeminfo என்று தட்டச்சு செய்து "என்டர்" செய்யவும்.
4) Start பட்டனை கிளிக்செய்து Run இல் msinfo32 என ரைப்செய்து Ok செய்யுங்கள் முழுவிபரங்களும் வரும்.

வாங்கும் போது நீங்கள் கேட்டவைகள் பொருத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்யுங்கள்

JAFFNA
MARSHA SYSTEMS (PVT) LTD
# 74, Kannathiddy Junction,
Jaffna.
T.P:- 0212229418
0777667108

NELLIADY
TEKNEL COMPUTERS & TECHNOLOGY
364/364, Kodikamam Road,
Nelliady.
T.P:- 0777069934

CHAVAKACHCHERI
SCOT COMPUTER CENTRE
Katkuly 1st Lane,
Post Office Road,
Chavakachcheri.
T.P:- 0776701394


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.